RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி!
குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 29, 05 ஆகஸ்ட் 2022 இதழ்:- 15

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு - ஜனாதிபதி ரணில் இடம் பெற்ற முக்கிய சந்திப்பு!



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று 03 ஆகஸ்ட் 2022 புதன்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

சர்வ கட்சி அரசாங்கத்தினை அமைக்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ள நிலையிலேயே இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது. இதன் போது தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சி னைகள் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.(5ம் பக்கம் பார்க்க)

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial Industrial Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

## "கோ ஹோம் சம்பந்தன்" செல்வத்தின் கலகக்குரல்! கூட்டமைப்புக்கு கூட்டுத் தலைமை சாத்தியமா?

ரணில் விக்கிரமசிங்கவுக்கா அல்லது டல்லஸ் அழகப் பெருமவுக்கா வாக்களிப்பது என்பதில் ஆரம்பமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்வீட்டுக் கலகம் இப்போது தலைமைப் (9ம் பக்கம் பார்க்க)



## "விக்கி கோ கொழும்பு" விக்கி அணிக்குள் வெடிக்கும் மோதல்!



BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக
உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4



## இலங்கைக்கு இராஜதந்திர நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள சீன கண்காணிப்பு கப்பல்

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct: 416-624-7971 Office: 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

18 Years Real Estate Experience

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com





HOMELIFE HIGHER STANDARDS

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
Bus: 416.298.3200
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Central Park / Bramalea

Brampton 674,900
Bedrooms: 3 Washrooms: 2
Lots Of Upgrades, Neutrally Painted


### Park Rd / Wentworth

Oshawa $499,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Well Maintained Complex

### Kennedy & Progress

Scarborough $548,000
Bedrooms: 2 Washrooms: 1
Ground Floor Unit, Great Location


### Eglinton/Markham

Scarborough $624,900
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept, Very Large Rooms


### Lawrence/ Galloway

Toronto $499,900
Bedrooms: 4 Washrooms: 2
New Hardwood Floors Throughout

### Mccowan/401

Scarborough $589,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Newly Renovated ,Open Concept

### Kennedy/401


Scarborough $599,900
Bedrooms: 1 Washrooms: 1
Close To High Way, Shopping Plaza

### Dixie/Clark

Brampton $629,900
Bedrooms: 3 Washrooms: 2
Upgraded & Spacious Corner Unit

### Eglinton/Markham

Scarborough $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated & Low Maintenance Free

### Yonge/Davis

Newmarket $1,699,000
Bedrooms:4+1 Washrooms: 5
Over 4000 Sq Ft

### Hwy 7/ Leslie

Markham $649,900
Bedrooms: 3+1 Washrooms: 3
Open Concept, Newer Paint

### Don Mills/Eglinton


Scarborough $549,900
Bedrooms: 3 Washrooms: 2
Location! Location! Location!

### Donald Cousens Pkwy / 16th Ave

Markham $1,499,999
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx. 2520 Sq Ft

### Meadowvale & Ellesmere

Scarborough $1,699,000
Bedrooms: 4 Washrooms: 4
$$$$ On Upgrades

### Brimorton/ Scar. Golf
FOR LEASE

Scarborough $1,100
Bedrooms: 1 Washrooms: 1
Basement Apartment for Rent

### Major Mack/Mccowan
FOR LEASE

Markham $2,900
Bedrooms: 4 Washrooms: 3
Throughout Hardwood Floor

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)

3 AGP MART
4A WADE AVE
TORONTO

4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கோட்டா மீதான மனிதஉரிமை மீறல் குற்றச் சாட்டுக்களுடன் பொருளாதாரக் குற்றங்களும் முறைப்பாட்டில் உள்ளடக்கம்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ உள்ளடங்கலாக ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்கள் நாட்டின் பொருளாதாரத் தைக் கட்டுப்படுத்துகின்ற முக்கிய பொறுப்புக்களை வகித்ததாகச் சுட்டிக் காட்டியுள்ள சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தின் நிறை வேற்றுப்பணிப்பாளர் யஸ்மின் சூக்கா, எனவே தாம் சிங்கப்பூர் சட்டமா அதிபரிடம் சமர்ப்பித்திருக்கும் குற்ற வியல் முறைப்பாட்டில் மனித உரிமை மீறல் குற்றங்களுக்கு அப்பால் பாரிய ஊழல், மோசடிகள் உள்ளடங்கலாக நாட்டின் தற்போதைய நிலைக்குக் காரணமான பொருளாதாரக்குற்றங்கள் தொடர்பான ஆவணங்களும் உள்ளட க்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைக் கைது செய்யுமாறு வலியுறுத்தி சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற் திட்டத்தினால் சிங்கப்பூர் சட்டமா அதிப ரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றவியல் முறைப்பாட்டு ஆவணம் தொடர்பில் பிரிட்டனைத் தளமாகக்கொண்டியங்கும் வானொலி சேவையொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே யஸ்மின் சூக்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்நேர்காணலில் அவர் மேலும் கூறிய தாவது: இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு மேமாதம் முடிவிற்குக் கொண்டு வரப்பட்ட போரின் இறுதிக் கட்டத்தில் இடம் பெற்ற மிகமோசமான மனித உரிமை மீறல் குற்றங்களில் முன் னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வின் தொடர்பு குறித்த ஆவணங்கள், ஆதாரங்கள் நாம் சமர்ப்பித்திருக்கும் குற்றவியல் முறைப்பாட்டில் உள்ளடக் கப்பட்டுள்ளன. சிங்கப்பூர் சட்டத்தின் பிரகாரம் சர்வதேச சட்ட அதிகார வரம் பின் கீழ் இதுகுறித்து அந்நாட்டிலேயே விசாரணைகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ பொதுமக்கள் மீதும் வைத்தியசாலைகளின் மீதும் தாக்குதல் களை நடத்துவதற்குக் கட்டளை பிறப்பித்தமை, மக்களை பட்டினியில் வாடச் செய்தமை, பாதிக்கப்பட்டவர்களு க்கு மருத்துவ உதவிகள் சென்றடை வதில் தடையேற்படுத்தியமை, யுத்த சூனிய வலயத்தில் தாக்குதல் நடத்துவ தற்குக் கட்டளையிட்டமை உள்ளடங் கலாக மனிதகுலத்திற்கு எதிரான பல குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டியவராக இருக்கின்றார்.

அது மாத்திரமன்றி கடந்த 1989 ஆம் ஆண்டில் ஜே.வி.பி எழுச்சி மற்றும் கலவரங்களின் போது மாத்தளை மாவட் டத்திற்குப் பொறுப்பான இராணுவ அதிகாரியாகப் பணியாற்றிய கோட்டாபய ராஜபக்ஷ, அக்காலப்பகுதியில் இடம் பெற்ற பெருமளவான மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்டிருக்கின்றார்.

மனித உரிமை மீறல்கள் ஒருபுறமிருக்க கடந்த 2015 ஆம் ஆண்டுக்கு முன்ன ரான காலப்பகுதியில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோது அவரது சகோதரரும் முன்னாள் ஜனாதி பதியுமான கோட்டாபய ராஜபக்ஷவே பாதுகாப்புச்செயலாளராக செயற்பட்டார்.

அது மாத்திரமன்றி அவரது குடும்ப உறுப்பினர்கள் பலரும் நாட்டின் பொரு ளாதாரத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய முக்கிய பொறுப்புக்களை வகித்தனர். அதனைத் தொடர்ந்து 2015 – 2019 வரையான காலப்பகுதியில் ராஜபக்ஷ குடும்பத்தினர் ஆட்சியதிகாரத்தை இழந்த போதிலும், மீண்டும் 2019 ஆம் ஆண்டில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவானதைத் தொடர் ந்து பொருளாதாரத்தைக் கட்டுப்படுத் தும் அதிகாரம் மீண்டும் அவர்களின் கைகளுக்குச் சென்றது.

அதன்படி மனித உரிமை மீறல் குற்றங் களுக்கு அப்பால் பாரிய ஊழல், மோசடி கள் உள்ளடங்கலாக நாட்டின் தற்போ தைய நிலைக்குக் காரணமான பொரு ளாதாரக்குற்றங்கள் தொடர்பான ஆவண ங்களும் எமது முறைப்பாட்டில் உள்ளட க்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.


# இலங்கை நெருக்கடி ஜனநாயக தன்மை கொண்ட அரசாங்கத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது -அமெரிக்கா

இலங்கை நெருக்கடி அதிகளவு ஜன நாயக அரசாங்கத்தை உருவாக்குவதற் கான வாய்ப்பை வழங்கியுள்ளது என அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கென் தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது சவாலான நெருக் கடியான தருணத்தில் உள்ளது ஆனால் அந்த நாட்டிற்கு அதிகளவு ஜனநாயக தன்மை மிக்க அனைவரையும் உள்ள டக்கிய அரசாங்கத்தை உருவாக்குவதற் கான வாய்ப்புள்ளது என அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங் கென் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை கம்போடிய தலைநகரில் ஆசிய வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் சந்தித்த வேளை அமெரிக்க இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித் துள்ளார்.

இலங்கைக்கு சர்வதேச நாணயநிதியத் தின் உதவி கிடைப்பதற்கு அமெரிக்கா வழங்கும் உதவியை பாராட்டுவதாக அலி சப்ரி தெரிவித்துள்ளார்.





இதேவேளை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடன் இலங்கை நெருக்கடி குறித்து விவாதித்ததாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கென் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஸ்யாவின் போரினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் இலங்கையின் அரசியல் பொருளாதார நிலை குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டேன் என பிளிங்கென் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். கம்போடியா வில் இடம் பெறும் ஆசியாவின் வெளி விவகார அமைச்சர்கள் சந்திப்பிற்கு முன்னதாகவே இருவரும் சந்தித்து ள்ளனர்.

இந்த சந்திப்பில் முதலில் கருத்து தெரி வித்த அன்டனி பிளிங்கென் இந்தோ பசுபிக்கில் ஆசியாவின் மையத்தன்மை க்கு இந்தியாவும் அமெரிக்காவும் வலு வான ஆதரவாளர்கள் என குறிப்பிட் டார் என அமெரிக்க இராஜாங்க திணை க்களம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு நாளும் பல்வேறு வழிகளில் நாங்கள் இதற்கான முயற்சிகளில் ஈடு பட்டுள்ளோம் எனவும் அவர் தெரிவித்து ள்ளார்.

இலங்கை மியன்மாரின் தற்போதையய நிலைமை உட்பட சில பகுதிகளில் நாங்கள் உடனடி சவால்களை எதிர் கொண்டுள்ளோம் இது குறித்து கரி சனை கொண்டுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# கோட்டாபயவைக் கைது செய்யும் கோரிக்கையை கனடா ஆதரிக்கும்!

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்வதற்கான கோரிக்கையை ஆதரிப்பதாக கனடாவின் பிரதான எதிர்க்கட்சியான பழமைவாதக் கட்சியின் (**Conservative Party of Canada**) தலைமைப் பதவிக்குப் போட்டியிடும் பியார் பொய்லிஎவ்ரா **(Pierre Poilievre)** பகிரங்க அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார். அத்துடன் கனடாவின் பிரதமராக தான் தெரிவாகும் பட்சத்தில் யாழ்ப்பாணத்தில் கனடாவின் நிரந்தர தூதரக சேவைகளை வழங்கும் நிலையம் ஒன்று திறக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.



தற்போது கனடாவின் பிரதான எதிர்க்கட்சியாக பழமைவாதக் கட்சி உள்ளது. இந்தக் கட்சியின் தலைமைப் பதவிக்கான உட்கட்சி தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 10ஆம் திகதி நடக்கவுள்ளது. இந்தத் தேர்தலிலும், அதன் பின்னரான நாட்டின் பொதுத் தேர்தலிலும் பியார் பொய்லிஎவ்ரா வெற்றி பெற்று கனடாவின் அடுத்த பிரதமராவார் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பியார் பொய்லிஎவ்ராவின் பகிரங்க அறிவிப்பு கனடாவில் மட்டுமின்றி சர்வதேச அரசியல் மட்டத்திலும் பெரும் கவனத்தையும் அதிர்வலையையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 28 யூலை 2022 வியாழக்கிழமை பியார் பொய்லிஎவ்ரா வெளியிட்ட அறிக்கையில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது சிங்கப்பூரில் உள்ள நிலையில், அவரைக் கைது செய்வதற்கான கோரிக்கைகளில் இலங்கை மனித உரிமைகள் வழக்கறிஞர்களுடன் இணைந்து, சர்வதேச நீதிமன்றம் அல்லது நீதிமன்றத்தின் முன் நீதியை நிலை நாட்ட கனடா அரசாங்கத்தின் முழுப்பொறுப்பையும் கொண்டு வருவேன்.

தமிழ் மக்களின் அழிவுகரமான இனப்படுகொலையைத் தொடர்ந்து நல்லிணக்கத்திற்காக அரசியல் கைதிகளை விடுவிக்குமாறும், நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்க விரும்பும் இலங்கையர்களின் விருப்பத்துக்கு மதிப்பளிக்குமாறும் அழைப்பு விடுக்கிறோம்.

ஏற்கனவே வடக்கு, கிழக்கில் பெண்களும் சிறுபான்மையினரும் யுத்தம் மற்றும் இராணுவ ஆக்கிரமிப்பால் கொடூரமான முறையில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். போரினால் கணவனை இழந்துவிட்ட பெண்களுளுக்கு இழப்பீடுகளை வழங்கு மாறும் இலங்கையின் வடக்கு கிழக்கை இராணுவ மயமற்ற பகுதிகளாக்குமாறும் ஒரு தசாப்தத்திற்கு மேலாக வலியுறுத்தி நின்றோம் என்றும் கூறியுள்ளார். ஆனால் அமைதியான எவ்வித போராட்டங்களும் அற்ற வடக்கு கிழக்கு உலகில் அதிக இராணுமயமாக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்றாக மாறியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலான இன்றைய குழப்பத்திற்கும் சீர்கேட்டிற்கும் ராஜபக்ச அரசே காரணம் என்ற எமது புரிதலை இன்று உலகே புரிந்துள்ளது. தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்கு பின்னர் நல்லிணக்கத்தை நீண்டகாலம் நாம் வலுயுறுத்தியது மட்டுமன்றி அரசியல் கைதிகளின் விடுதலையையும் கோரி நின்றோம். அத்துடன் அதிகார வெறி கொண்ட நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையை ஒளித்துவிடுங்கள் என்ற இலங்கை மக்களின் கோரிக்கைக்கு மரியாதை செலுத்துமாறும் வேண்டுகிறோம்.

ஜஸ்ரின் ட்ரூடோ ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், கனடாவின் பிரதமராக இருந்தவர் ஸ் ரீபன் ஹார்பர் (2006–2015). இவரின் ஆட்சி ராஜபக்ஷக்களின் அரசுக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியவர் முன்னாள் பிரதமர் ஸ்ரீபன் ஹார்பர். இவர் பியார் பொய்லிஎவ்ராவுக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார். இந்த நிலையிலேயே இலங்கை குறித்த அவரின் காட்டமான அறிக்கை அரசியல் மட்டங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈழத்தமிழர் விவகாரத்தில் இவ்வளவு காத்திரமான கருத்துக்களை தெரிவித்திருப்பது மட்டுமன்றி ஈழத்தமிழர் விவகாரத்தில் சர்வதேச அளவில் சிறப்பாக செயல்ப்பட்ட முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயட்டை இவ்விவகாரத்தில் தனது அலோசககரக நியமித்திருப்பது கனடா வாழ் ஈழத்தமிழர்களுக்கு பெரும் மகிழ்ச்சி தரும் விடயமாகியுள்ளது.

தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ள கோட்டாபய ராஜபக்ஷவை, அவர் இழைத்த போர் குற்றங்களு க்காகக் கைது செய்ய வேண்டும் என்று உண்மை மற்றும் நீதிக்கான சர்வதே செயல்திட்டம் அமைப்பின் சட்டத்தரணிகளால் அந்த நாட்டின் சட்ட மா அதிபரிடம் மனு ஒன்று அளிக்கப்பட்டுள்ளது.




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

05 ஆகஸ்ட் 2022- திங்கள் - வரலட்சுமி விரதம் (விளக்குப்பூஜை)

உபயம்:- சாரதா விமல்ராஜ் குடும்பம்

விளக்குப் பூஜை மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.

09 ஆகஸ்ட் 2022- செவ்வாய் - பிரதோஷ விரதம்

30 ஆகஸ்ட் 2022- செவ்வாய் - விநாயகர் (ஆவணி) சதுர்த்தி

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு - ஜனாதிபதி ரணில் இடம் பெற்ற முக்கிய சந்திப்பு!



(முதலாம் பக்கத் தொடர்ச்சி) குறிப்பாக தமிழ் மக்களின் நலன்சார்ந்த 10 முக்கிய விடயங்களை நிறை வேற்றுமாறு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் வெளியிட்டுள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார். இதன் போது கருத்து வெளியிட்ட சிறிதரன், ஜனாதிபதி தெரி வின் போது கூட்டமைப்பினர் டலஸ் அழகப்பெரு விற்கு வாக்களித்திருந்தமையினை சுட்டிக் காட்டி யிருந்தார்.

எனினும் இதனை பொருட்படுத்தாமல் தங்களது கோரி க்கையினை நிறைவேற்றவுள்ளமையினை வரவேற் பதாகவும் அவர் தெரிவித்தார். இதனை எம்.ஏ சுமந் திரன் மொழி பெயர்த்திருந்தார்.

இதன் போது பதில் வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தனக்கு ஆதரவாக வாக்களித்திரு ந்ததாக குறிப்பிட்டார். இதன் போது குறித்த கூட்ட த்தில் பங்கேற்றிருந்த கூட்டமைப்பின் சில பாராளு மன்ற உறுப்பினர்கள் மௌனம் காத்திருந்தனர்.

அத்துடன் ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டத்தின் அடிப்படையிலேயே, சர்வ கட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என்பதனை தீர்மானி க்க முடியும் என கூட்டமைப்பினர் ஜனாதிபதியிடம் குறிப்பிட்டிருந்தனர்.

குறித்த சந்திப்பில் பிரதமர் தினேஸ் குணவர்த்தனவும் பங்கேற்றிருந்தார் என்பதுக் குறிப்பிடத்தக்கது. கூட்ட மைப்பினர் ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ள முக்கிய கோரிக்கைகள் வருமாறு.

நீண்ட காலமாக சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதி களில் ஒரு தொகுதியினரை மூன்று மாத காலத்திற்குள் முதற் கட்டமாக விடுதலை செய்வது.

அம்பாறை மாவட்டம், கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை 1991ஆம் ஆண்டு வெளியிடப் பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பிரதேச செயலகமாக தரமுயர்த்துவதுடன் கணக்காளர் ஒருவரையும் நியமித்தல்.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் தனிப்பட்ட காணி களிலும், பொதுப்பயன்பாட்டுக்குரிய அரச காணிகளி லும் அடாத்தாக முகாமிட்டிருக்கும் இராணுவத்தின ருக்கு அக்காணிகளை நிரந்தரமாக வழங்கும் முக மாக, நில அளவைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் படும் அளவீட்டுப் பணிகளை உடனடியாக நிறுத்து தல்.

தொல்பொருள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, வனவளத் திணைக்களம், வனஜீவராசி கள் திணைக்களம், கனியவளத் திணைக்களம் உள்ளிட்டவற்றால், வடக்கு, கிழக்கு தமிழர் நிலங் களில் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புக்களை உடன் நிறுத்துதல்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்கு தல் மற்றும் அதற்கான நல்லெண்ண சமிக்ஞைகளை முதலில் வெளிப்படுத்தல், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் செயலகத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மான ங்களை நடைமுறைப்படுத்த உதவுதல்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை நிலைநிறுத்தவும், உண்மையைக் கண்டறிவதற்கும் உடனடி நடவடிக்கை எடுத்தல்.

வடக்கு, கிழக்கிலுள்ள தனியார் காணிகளிலிருந்து படையினரை வெளியேற்றி, தமது சொந்த நாட்டில் இன்னும் அகதிகளாக உள்ள எமது மக்கள் தமது பூர்வீக நிலங்களில் குடியேற வழிவகை செய்தல்.

கடந்த எண்பது வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டில் புரையோடிப் போயுள்ள தமிழர்களின் உரிமை க்கான அரசியல் தீர்வுக்காக, காலதாமதமற்ற உடனடிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தல். உள்ளிட்டவற்றி னையே முன் வைத்திருந்தனர்.

# ஆத்திர மூட்டல்களைத் தவிர்க்க வேண்டும்! சீனத் தூதுவரை சந்தித்த ஜனாதிபதி ரணில்!



அதிபர் ரணில் விக்ரமசிங்கவிற்கும், சீனத் தூதுவர் சீ சென்ஹொங் (**Qi Zhenghong**) இற்கும் இடை யிலான சந்திப்பொன்று நேற்று 04 ஆகஸ்ட் 2022 முற்பகல் அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஒரு சீனா கொள்கை தொடர்பில் இலங்கையின் கடைப்பிடிப்பு மற் றும் ஐக்கிய நாடுகளின் இறை யாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு பற்றிய சாசனக் கோட்பாடுகளுக்கான இலங்கையின் அர்ப்பணிப்பையும் குறித்த சந்திப் பில் வலியுறுத்தப்பட்டதாக அதிபர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள் ளார்.

டுவிட்டர் பதிவொன்றை வெளி யிட்டு ரணில் விக்ரமசிங்க இந்த விடயத்தினை குறிப்பிட்டுள்ளார். தற்போதைய உலகளாவிய பதட்ட ங்களை மேலும் அதிகரிக்கும் ஆத்திர மூட்டல்களை நாடுகள் தவிர்க்க வேண்டும்.

பரஸ்பர மரியாதை மற்றும் நாடு களின் உள் விவகாரங்களில் தலை யிடாமை, அமைதியான ஒத்துழை ப்பு மற்றும் மோதலின்மைக்கு ஒரு முக்கிய அடிப்படையாக அமையும் எனவும் குறித்த பதிவில் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சீன உளவுக் கப்பல், இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்த கமாக இருக்குமானால் அதை நாங்கள் வன்மையாக எதிர்ப்போம் என தமிழ்த் தேசியக் கூட்டமை ப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். இந்தியாவுக்கு அண் மித்த பிரதேசத்தில் இலங்கை இருக்கின்றது. ஆகவே தான் போர்ட் சிட்டி விடயத்திலும் நாங் கள் இதனைக் கூறி இருந்தோம். அதற்காக சீனாவுக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல என்றார்.

# நாம் சதுரங்க ஆட்டத்தின் பார்வையாளர்களா?

யுத்தம் நிறைவுற்று பன்னிரு ஆண்டுகளாகி விட்டன. இந்தக் காலத்து அரசியலுக்கு சம்பந்தன் தலைமை யிலான கூட்டமைப்பே தலைமையேற்றிருந்தது. 2009இற்கு முற்பட்ட தமிழ்த் தேசிய அரசியல் முற்றிலும் மாறு பட்டது. அது தொடர்பில் விவாதிப்பதற்கு ஒன்று மில்லை. ஏனெனில், ஆயுதபலத்தின் மூலம் தனிநாடு ஒன்றை அடைய முடியுமென்று விடுதலைப்புலிகள் நம்பியிருந்தனர். அதற்காகப் போரிட்டனர். அந்த வகை யில் அரசியல் சதுரங்க ஆட்டத்தை அவர்கள் ஆடினர். அவர்கள் பார்வையாளர்களாக இருக்கவில்லை.

எனினும், 2001இற்கு பின்னர் ஏற்பட்ட உலகளாவிய அரசியல் மாற்றங்களுக்கு மத்தியில் ஆயுதப் போராட்டத் தால் நிலைக்க முடியவில்லை. விடுதலைப் புலிகளின் அழிவின் உரிமையை ராஜபக்ஷக்கள் எடுத்துக் கொண்ட போதிலும், அது முழுமையான உண்மை யல்ல. ஏனெனில் ராஜபக்ஷக்கள் கருவிகள் மட்டுமே. அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் பிரகடனமும், அதனால் ஏற்பட்ட புதிய உலக ஒழுங் குமே விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியில் முதன்மையாக செல்வாக்குச் செலுத்தியிருந்தது.

விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியைத் தொடர்ந்தே, சம்பந்தன் தீர்மானகரமான அரசியல் தலைவராக, தமிழ் மக்கள் மத்தியில் தெரியத் தொடங்கினார். ஏனெனில், 2009இற்கு முன்னர் தமிழ்த் தேசிய அரசியலில் சம்பந்த னுக்கு எந்தவொரு முதன்மையான இடமும் இருந்தி ருக்கவில்லை.

ஆனால், 2009இற்கு பின்னரான காலம் முற்றிலுமாக சம்பந்தனின் ஆளுமைக்கு உட்பட்ட காலமாகவே நீண்டு சென்றது. இதன் நீட்சியாகவே சம்பந்தன் இப்போதும் கூட்டமைப்பின் தலைவராக இருக்கின்றார். 2010இல், சரத் பொன்சேகாவை ஆதரித்ததிலிருந்து, கடந்த பன்னிரு வருடங்களில், சம்பந்தன் தலைமையில் பல்வேறு நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. அரசியல் தீர்வை பெறுவதற்காக சம்பந்தன் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகிறார் என்றே மக்க ளும் நம்பினர் - நம்ப வைக்கப்பட்டனர். ஆனால், குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எந்தவொரு மாற்றங்களும் தமிழர் அரசியல் வாழ்வில் ஏற்படவில்லை.

கூட்டமைப்பின் ஒவ்வொரு முடிவின் போதும், இந்தியா தொடர்பிலும் அமெரிக்கா தொடர்பிலுமே எடுத்துரைக்கப்பட்டன. 2010இல், சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் முடிவின் போதும், இந்திய மற்றும் மேற் குலக கதைகளே கூறப்பட்டன. 2015இல், ஆட்சி மாற்றத்தின் போதும், அவ்வாறான கதைகளே கூறப் பட்டன. சஜித் பிரேமதாஸவை ஆதரித்த போதும் அதே சொற்கள் தான் உச்சரிக்கப்பட்டன. இறுதியாக டலஸ் அழகப்பெருமவை ஆதரித்த போதும், இந்தியா மற்றும் அமெரிக்கவின் தலையீடுகள் தொடர்பிலேயே குறிப்பிடப் பட்டது.

இவைகள் உண்மையெனில், ஒரு பிராந்திய சக்தியின தும், உலக சக்தியான அமெரிக்காவினதும் பரிந்துரை களின் பெயரால் தான் கூட்டமைப்பு தீர்மானங்களை எடுத்திருக்குமாயின், அதனால் தமிழ் மக்கள் ஏராளமான நன்மைகளை அல்லவா அடைந்திருக்க வேண்டும். ஆனால், எந்தவொரு மாற்றமும் தமிழ்மக்களுக்கு சாதகமாக நிகழவில்லையே! எனவே, இதனை ஆழமாக பார்த்தால் இரண்டு முடிவுகளுக்குத் தான் நாம் வரமுடியும்.

ஒன்று, நடைபெற்ற விடயங்களின் முழுநன்மையையும் சில அரசியல்வாதிகள் பெற்றிருக்கின்றனர். அதாவது, தமிழ் மக்களின் பெயரால் அவர்களின் குடும்பங்கள் மட்டுமே நன்மையடைந்திருக்கின்றன. அப்படியில்லை யென்றால், சம்பந்தனும் அவரின் சகாக்களும் வெறு மனே, மற்றவர்களுக்கான அரசியல் சதுரங்க ஆட்டத் தில் பார்வையாளர்களாக இருந்திருக்கின்றனர்.

அதாவது கிடைத்த வாய்ப்புக்களை நழுவ விட்டிரு க்கின்றனர். சூழ்நிலையை, கையாள அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. இப்போது மீளவும் ஒரு சதுரங்க ஆட்டத்துக்கான ஏற்பாடுகள் நம்முன்னால் இடம்பெறு கின்றன. 17 வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி கதிரை க்கு மிகவும் அருகில் வந்து, தமிழ் மக்களின் பகிஷ் கரிப்பால் தோல்வியை தழுவிக் கொண்ட, ரணில் விக்கிரமசிங்க மீளவும் ஆடுகளத்தில், அதிகாரம் மிக்க வராக இருக்கின்றார்.

ஒரு புதிய ஆட்டமொன்றை ஆடுவதற்கு அவர் தயாரா கிக் கொண்டிருக்கின்றார். இந்த ஆட்டத்தின் போதும், வழமை போல் எங்களுடைய காலம் வெறுமனே, பார்வையாளராக கழிந்து செல்லப் போகின்றதா?

# பிரபாகரன் பிரபுத்துவ அரசியலுக்கு எதிராகப் போராடியவர்!
## ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட்ட டலஸ் அழகப்பெருமா தெரிவிப்பு!



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட நான்கு தலைவர்கள் நாட்டில் பிரபுத்துவ அரசியலுக்கு எதிராக குரல் கொடுத்தவர்கள் என முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றின் நேர்காணலில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்துரைத்த அவர்

இலங்கையின் வரலாற்றில் சுதந்திரத்திற்கு பின்னர் நான்கு பிரபுக்கள் குடும்பங்களை சேர்ந்தவர்களே நாட்டை நீண்ட காலம் ஆட்சி செய்துள்ளனர். சேனாநாயக்க குடும்பம், ஜெயவர்தன குடும்பம், பண்டாரநாயக்க குடும்பம் மற்றும் ராஜபக்ச குடும்பம் என நான்கு அரசியல் பிரபுக்களின் குடும்பங்களே நாட்டை நீண்டகாலம் ஆட்சி செய்தன.

இடையில் சில ஆண்டுகள் ரணசிங்க பிரேமதாச, டி.வி.விஜேதுங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகிய பிரபுத்துவ அரசியலில் இருந்து வராத கீழ் மட்டத்தை சேர்ந்தவர்கள் நாட்டை ஆட்சி செய்தனர்.

இந்த அரசியல் பிரபுக்களின் ஆட்சிக்கு எதிராக பிரபுக்கள் அற்றவர்களின் அரசியலுக்காகவே சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி போன்றவை ஆரம்பிக்கப் பட்டன. பிரபுக்களின் அரசியலுக்கு எதிராக சிலர் கிளர்ந்து எழுந்தனர்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற வாக்கெடுப்பின் போது என்ன நடந்தது, வரலாற்றில் முதல் முறையாக இரண்டு பிரபுக்கள் குடும்பங்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்துகொண்டனர். ஜெயவர்தன, ராஜபக்ச குடும்பங்கள் டலஸ் அழகபெருமவுக்கு எதிராக ஒரு முகாமில் இணைத்தனர்.

இதற்கான காரணம் என்னவென்று தெரியாது. நான் போட்டியிட்டதன் பின்னணியில் இருந்தவர்கள் நான் குறிப்பிட்டது போல் வரலாற்றில் பிரபுத்துவ அரசியலுக்கு எதிராக குரல் கொடுத்தவர்கள்.

பிரபுக்கள் அற்ற அரசியல் முன்னெடுப்பதற்காக கடந்த 50 ஆண்டுகளில் நான்கு பிரதான பாத்திரங்களை நாம் பார்த்திருக்கின்றோம். விஜயகுமாரதுங்க, ரோஹன விஜேவீர, ரணசிங்க பிரேமதாச, வேலுப்பிள்ளை பிரபாகரன். இவர்களின் அரசியலை நான் நியாயப்படுத்தவில்லை.

எனினும் அவர்கள் பிரபுக்கள் அற்ற அரசியலுக்காக குரல் கொடுத்தனர். பிரபுக்கள் அற்ற அரசியலுக்காக குரல் கொடுத்த இந்த நான்கு பேரும் இறுதியில் வீதியில் கொலை செய்யப்பட்டனர். ஆனால், பிரபுக்கள் மக்களின் தோளின் மீது மிக கௌரவமாக மயாணத்தை நோக்கி சென்றனர். இது தான் வரலாறு எனக் குறிப்பிட்டார்.

நீதி இல்லாத நாட்டிற்கு எதிர்காலம் இல்லை. இந்த நிலையை ஏற்படுத்தியவர்கள் மக்கள் அல்ல. அரசியல்வாதிகளே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சிங்கப்பூர் வந்த கோத்தாவை அரசாங்கம் தேடினால்
## சட்ட நடவடிக்கை எடுக்குமென சிங்கப்பூர் அமைச்சர் தெரிவிப்பு!



சிங்கப்பூரிற்கு வந்த வெளிநாட்டவரை அவரது அரசாங்கம் தேடினால் அது குறித்து அந்த நாடு வேண்டுகோள் விடுத்தால் சட்டத்தின் அடிப்படையில் சிங்கப்பூர் உரிய நடவடிக்கையை எடுக்கும் என அந்த சிங்கப்பூரின் உள்துறை அமைச்சர் கே சண்முகம் தெரிவித்துள்ளார்.

சட்டபூர்வமான பயண ஆவணங்கள் உட்பட உரிய தேவைகளை கொண்டுள்ள வெளிநாட்டவர்கள் சிங்கப்பூரிற்கு வருவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என உள்துறை அமைச்சர் சண்முகம் தெரிவித்துள்ளார்.

எனினும் எங்கள் தேசிய நலன்களை அடிப்படையாக வைத்து ஒருவருக்கு உரிய அனுமதியை மறுக்கும் உரிமை எங்களிற்குள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(22ம் பக்கம் பார்க்க)


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

**Math & Physics Tutoring**

**(For High School Students)**



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# "விக்கி கோ கொழும்பு" விக்கி அணிக்குள் வெடிக்கும் மோதல்!

ரணில் விக்ரமசிங்க தலைமையிலான சர்வகட்சி அரசாங்கத்தின் அமைச்சரவையில் விக்னேஸ்வரன் அங்கம் வகித்தால் விக்கி கோ கொழும்பு என்கிற கோஷத்தை எழுப்பும் முதல் ஆளாக நானே இருப்பேன் என தமிழ் மக்கள் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் அருந்தவபாலன் தெரிவித்தார்.

தென்மராட்சியில் உள்ள அவரது இல்லத்தில் 02 ஆகஸ்ட் 2022 ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் எழுத்து மூலம் செய்யப்பட்ட உறுதிப்பாடுகள் மனதால் இணைந்த உறுதிப்பாடுகளுக்கு என்ன நடந்தது என்பதை நாம் பார்த்தோம். தற்போதைய அரசோ நிலையற்ற அரசு. இந்த அரசால் எந்த ஒரு பிரச்சினையையுமே தீர்க்க முடியாது. குறைந்தது தற்போதுள்ள பொருளாதார பிரச்சினையை கூட தீர்க்குமா என்பதே கேள்விக்குறி.



தற்போதைய அரசும் சிங்கள பௌத்த விடயங்களை பாதுகாக்கின்ற ஒன்றே. எழுத்து மூலமான ஒப்பந்தங்களோ வாய் மூலமான ஒப்பந்தங்களோ அவர்களை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளே அன்றி அதனால் இந்த பலனும் கிடையாது. எமது கட்சியின் செயலாளர் நாயகம் விக்னேஸ்வரன் தற்போதைய அரசாங்கத்தில் இணைய மாட்டார் என முழுமையாக நம்புகின்றோம். ஆனால் அவர் அரசாங்கத்தில் இணைவாரா இல்லையா என்பதை உறுதியாக கூற முடியாமலே இருக்கின்றோம்.

அவர் எடுக்கின்ற முடிவுகள் கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடியதாகவோ அல்லது பங்காளி கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடியதாகவோ அமைய வில்லை என்பது மன வருத்தத்துக் குரிய விடயம். ஆனாலும் அவ்வாறு ஒரு துரதிஷ்டமான ஒரு முடிவு ஏற்படாது என்றே நாம் நம்புகின்றோம்.

ஆனால் தன்னிச்சையான முடிவை எடுத்து ரணில் விக்ரமசிங்க தலைமையிலான சர்வ கட்சி அரசாங்கத்தின் அமைச்சரவையில் விக்னேஸ்வரன் அங்கம் வகித்தால் விக்கி கோ கொழும்பு என்கிற கோஷத்தை எழுப்பும் முதல் ஆளாக நானே இருப்பேன் என்றார்.

# தமிழ்மக்களின் நீண்ட கால அரசியல் பிரச்சனைகளுக்கு துரித தீர்வு கொள்கைப் பிரகடன உரையில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு!

தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் பிரச்சினைகளுக்கு துரித தீர்வு வழங்கப்படும் என அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அதன் பிரகாரம் 03 ஆகஸ்ட் 2022 காலை 10.30 மணிக்கு ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மூன்றாவது கூட்டத்தொடருக்கு தலைமை தாங்கினார். இதன் போது செயலாளர் நாயகம் பாராளுமன்ற கூட்டத்தொடர் முடிவுறுத்தப்பட்டமை மற்றும் பாராளுமன்றத்தை கூட்டுதல் பற்றிய பிரகடனத்தை சபைக்கு வாசித்தார்.

இதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரையை ஆற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது ஜனாதிபதி,

நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கம் இலங்கைக்கு வழங்கிய உதவிகளுக்கு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் நன்றி தெரிவித்தார்.

அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் சர்வகட்சி அரசாங்கத்தை அமைத்து அனைவரும் ஒன்றிணைந்து சவால்களை எதிர் கொள்வதே நெருக்கடிகளை தீர்ப்பதற்கான சிறந்த வழிமுறையாகும் என குறிப்பிட்டார்.

அமைதியான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பது மக்களின் அடிப்படை உரிமையாகும். நான் அதனை பாதுகாப்பேன். எனினும் வன்முறைகளுக்கும் பயங்கரவாதத்திற்கும் இடமளிக்க முடியாது.

அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக என்னால் எவ்வித பழிவாங்கல்களும் முன்னெடுக்கப்பட மாட்டாது எனத் தெரிவித்தார்.

19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் உள்ள பல முக்கிய விடயங்களை உள்வாங்கி உருவாக்கப்பட்டுள்ள 22ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்கு பாராளுமன்றத்தில் அனைவரது இணக்கப்பாட்டையும் எதிர்பார்க்கின்றேன் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் கேட்டுக் கொண்டார்.

# தேசிய சர்வ கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க இணக்கம்! ஜனாதிபதி ரணிலுக்கு எழுத்து மூலம் சம்பந்தர் அறிவிப்பு!

பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை உருவாக்குவதை முன்னிறுத்தி தேசிய சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்குத் தாம் முழுமையான ஆதரவை வழங்குவதாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

நாடு பாரிய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்கு இணங்குமாறு கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை உருவாக்குவதை முன்னிறுத்தி தேசிய சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பது குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அனுப்பிவைத்த கடிதம் தொடர்பில் அவதானம் செலுத்தியிருப்பதாகவும், அத்தகைய அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்குத் தாம் முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் ஜனாதிபதிக்கான தனது பதில் கடிதத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அது மாத்திரமன்றி நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து அரசியல், சமூக, கலாசார, பொருளாதார ரீதியில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வந்திருப்பதாக அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள அவர், அனைத்துத் தேசிய பிரச்சினைகளும் தீர்க்கப்படவேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார்

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# கோத்தாவிற்கு எந்த விசேட சலுகைகளையும் வழங்கவில்லை! சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் பாலகிருஷ்ணன் தெரிவிப்பு

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவிற்கு எந்த விசேட சலுகையையும் வழங்கவில்லை என சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. அவர் பதவி விலக வேண்டும் என உருவான மக்கள் எழுச்சியை தொடர்ந்து நெருக்கடியில் சிக்கியுள்ள நாட்டிலிருந்து மாலைதீவிற்கு சென்ற பின்னர் கோத்தபாய ராஜபக்ச தனது பதவியை இராஜினாமா செய்தார்.



பொதுவாக சிங்கப்பூர் முன்னாள் அரச தலைவர்கள் அல்லது அரச தலைவர்களிற்கு விசேட சலுகைகள் விடுபாட்டுரிமை விருந்தோம்பல் போன்றவற்றை வழங்குவதில்லை என அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.அதனடிப்படையில் கோத்தபாய ராஜபக்சவிற்கு சிறப்பு சலுகைகள் விடுபாட்டுரிமை போன்றவற்றை வழங்க வில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கப்பூரிற்கு விஜயம் மேற்கொண்ட இடைத்தங்கல் பயணத்தை மேற்கொண்ட வெளிநாட்டு தலைவர்களிற்கு வழங்கப்பட்ட விசேட சலுகைகள் குறித்து சிங்கப்பூரின் தொழில்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெரால்ட் சியாம் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார். சிங்கப்பூர் ஏதாவது பொதுவளங்களை பயன்படுத்தியதா இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட்டதா என அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள விவியன் பாலகிருஸ்ணன் ராஜபக்சவிற்கு சிறப்பு சலுகைகளையோ விடுபாட்டுரிமையோ விருந்தோம்பலையோ வழங்கிவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கைக்கு இராஜதந்திர நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள சீன கண்காணிப்பு கப்பல்

கட்டுரையாளர்:
ஈழநாட்டிற்காக கொழும்பில் இருந்து
– பவித்திரன் –

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் மிகப்பெரிய இராஜதந்திரச் சிக்கல் ஒன்றில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாட்டிக் கொண்டிருக்கின்றார். இந்த இராஜதந்திரச் சிக்கல் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் இலங்கையை பாரியளவில் பாதிக்கக்கூடியதாக இருப்பதால், இதிலிருந்து எவ்வாறு அவர் நாட்டை மீட்கப் போகின்றார் என்பதை சர்வதேசம் உன்னிப்பாக அவதானிக்கின்றது.

இலங்கையை மையப்படுத்திய சீன – இந்திய ஆதிக்கப் போட்டியில் முக்கியமான ஒரு கட்டத்தில் இப்போது நாம் இருக்கின்றோம். இந்த சதுரங்க ஆட்டத்தில் ரணில் எவ்வாறு காய்நகர்த்தப் போகின்றார்?

பாராளுமன்றத்தில் ஜனாதிபதிப் பதவிக்கான தேர்தல் நடைபெறுவதற்கு முதல் நாளிரவு நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினைக்கான அறிகுறிகள் வெளிப்பட்டன. டலஸ் அழகப்பெருமவைத் தான் இந்தியா விரும்புகின்றது எனவும், அதனால் கூட்டமைப்பு அவருக்குத் தான் வாக்களிக்க வேண்டும் எனவும் சம்பந்தனும் சுமந்திரனும் இந்தக் கூட்டத்தின் போது மற்றைய எம்.பி.க்களை வலியுறுத்தியிருந்தார்கள். அதனை கூட்டமைப்பு எம்.பி.கள் நம்ப மறுத்தமையால் இந்தியத் தூதரக அதிகாரி ஒருவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட சுமந்திரன் அதனை ஸ்பீக்கரில் போட்டு உறுதிப்படுத்தியதாகவும் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

இந்தத் தகவல் இரவோடிரவாக ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரிவிக்கப்பட, அவர் உடனடியாகவே இந்திய உயர்ஸ்தானிகருடன் தொடர்பு கொண்டு 'ஜனாதிபதித் தேர்தலில் இவ்வாறான ஒரு நிலைப்பாட்டை இந்தியா எடுத்துள்ளதா எனக்கேள்வி எழுப்பியிருந்தார். உயர்ஸ்தானிகர் 'அப்படியேதுவும் இல்லை' எனக் கூறியிருந்தாலும், தன்னைத் தோற்கடிப்பதற்கான வியூகத்தை அமைத்து புதுடில்லி செயற்பட்டிருக்கின்றது என்பதை ரணில் விக்கிரமசிங்கவினால் புரிந்து கொள்ள முடிந்தது.

ரணிலைத் தோற்கடித்து சஜித்தின் ஆதரவுடன் களமிறங்கிய டலஸ் அழகப்பெருமவை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என புதுடில்லி செயற்பட்டிருந்தால் அதற்கு காரணம் என்ன என்ற கேள்வி இந்த இடத்தில் பரவலாக எழுகின்றது.

இதற்கு இரண்டு மூன்று காரணங்கள் சொல்லப்பட்டாலும், இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு பிரதான காரணமாகச் சொல்லப்படுவது அம்பாந்தோட்டை துறைமுக விவகாரம் தான். இந்த துறைமுகம் மகிந்த ராஜபக்சவின் காலத்தில் அமைக்கப்பட்டதாக இருந்தாலும், அதனை 99 வருடகாலக் குத்தகைக்கு சீனாவுக்குக் கொடுக்கும் முடிவு 'நல்லாட்சிக் காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவினால் தான் எடுக்கப்பட்டது. சீனாவிடமிருந்து பெறப்பட்ட கடனை மீளளிக்க முடியாத நிலையில் அதனைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ரணிலுக்கு ஏற்பட்டிருந்தது.

கப்பல்களே வராத துறைமுகத்தை வைத்துப் பராமரிப்பதற்கு மாதாந்தம் ஏற்படும் பாரிய செலவீனத்தைத் தவிர்ப்பதற்கு இந்த முடிவை ரணில் எடுத்திருந்தார் எனக் கூறப்பட்டாலும் கூட, இவ்விடயத்தில் புதுடில்லிக்கு சில சந்தேகங்கள் இருந்துள்ளது. இப்போதும் இருக்கின்றது. குறிப்பாக கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை என்பன சீனாவுக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டாலும், இவற்றில் சீனாவின் ஆதிக்கத்தை யாராலும் கட்டுப்படுத்த முடியாது! கண்காணிக்கவும் முடியாது!

இதே அம்பாந்தோட்டை துறைமுகத்தை மையப்படுத்தி உருவாகியிருக்கும் இராஜதந்திர நெருக்கடி. தான் இன்று இந்தியாவை உசாரடைய வைத்துள்ளது. ரணிலுக்கு நெருக்கடியைக் கொடுக்கப் போவதும் இது தான்!



அம்பாந்தோட்டை துறைமுகத்தை அடுத்த வாரம் வந்தடையவுள்ள 'யுவான் வாங் 5' என்ற சீனாவின் உளவுக் கப்பல் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு கடும் எதிர்ப்பை இந்தியா எற்கனவே தெரிவித்துவிட்டது. இந்தியா எதற்காக அஞ்சியதோ அது இப்போது நடைபெறுவதாகவே புதுடில்லி கருதுகின்றது.

'யுவான் வாங் 5' என்ற இந்த உளவுக் கப்பல் 750 கிலோ மீட்டர் வரையில் வான்வழியாக கண்காணிக்கக்கூடிய வலுவைக்கொண்டது. இதனால் தென்னிந்தியாவின் கல்பாக்கம், கூடன்குளம் பகுதிகளில் இருக்கக் கூடிய அணுசக்தி திட்டங்கள் குறித்த தகவல்களை அதிலிருந்து அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பது தான் இந்தியாவின் அச்சத்துக்கு பிரதான காரணம்.

இதனை விட தென்னிந்தியாவிலிருக்கும் ஆறு துறைமுகங்களில் என்ன நடைபெறுகின்றது அதன் பாதுகாப்புக் கட்டமைப்புக்கள் எவ்வாறுள்ளன என்பன போன்ற தகவல்களையும் சேகரிக்கக் கூடிய தொழில்நுட்ப வல்லமை இந்தக் கப்பலுக்குள்ளது. விமான நிலையங்கள் உட்பட தென்னிந்தியாவின் முக்கியமான நிலையங்களை 'நோட்டம்' விடக்கூடிய ஆற்றலும் இந்தக் கப்பலுக்குள்ளது. இதில் உள்ள செயற்கைகோள் தொடர்புகள் மூலமாகப் பெறப்படும் தகவல்கள் இந்தியா அதன் தென்பகுதியின் பாதுகாப்பு கட்டமைப்புக்களை மாற்றியமைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

ஆக, இராணுவ ரீதியாகவும், கேந்திர அடிப்படையிலும் சீனாவின் இந்த உளவுக் கப்பலின் இலங்கை வருகையின் தாற்பரியங்கள் மிகவும் பாரதுரமானதாக இருக்கும் என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

அதனால், ஓகஸ்ட் 11 முதல் ஒரு வாரத்துக்கு இந்தக்கப்பல் இலங்கைக் கடற்பரப்பில் நிற்கப்போவது இந்தியாவின் பாதுகாப்புக்கு கடும் அச்சுறுத்தலாக இருக்கும் என இந்திய ஆய்வாளர்களும் புலனாய்வு நிறுவனங்களும் நரேந்திர மோடி அரசுக்கு கடுமையான எச்சரிக்கையைக் கொடுத்திருக்கின்றன. அதனையடுத்தே இந்திய அரசு இவ் விடயத்தில் உசாரடைந்திருக்கின்றது.

தமது பாதுகாப்பு நலன்கள் குறித்த அக்கறையை புதுடில்லி ஏற்கனவே கொழும்புக்குத் தெரிவித்து விட்டது. இருந்த போதிலும் இவ்விடயத்தை எவ்வாறு கையாள்வது என்பதில் ரணில் விக்கிரமசிங்க குழம்பிப் போயிருப்பதாகத் தெரிகின்றது.

தீவிரமான பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை சிக்கியிருக்கும் நிலையில் இந்தியா தான் உடனடியாக உதவிகளைக் கொண்டு வந்தது. மோடியின் 'அயல்நாட்டுக்கு முன்னுரிமை' என்ற வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட கடன் உதவிகளால் தான் எரிபொருட்களையும், மருந்துகளையும் கொள்வனவு செய்து இலங்கையால் மூச்சு விட முடிந்தது. இதனை விட தமிழகமும் பல கோடி டொலர் பெறுமதியான உணவு மருந்துப்பொருட்களைக் கொடுத்தது. இந்த நிலையில், இந்தியாவின் நலன்களைப் பாதிக்கும் வகையிலான சீனாவின் செயற்பாட்டுக்கு வழிவிடுவது எதிர்காலத்தில் இந்தியாவின் உதவிகளைப் பெருமளவுக்கு பாதிக்கலாம்.

மறு புறத்தில் அம்பாந்தோட்டையை சீனாவுக்குக் கொடுத்துள்ள நிலையில் அந்த நாட்டின் கப்பல் வருவதை தடுக்க முடியாத இக்கட்டான நிலை இலங்கைக்கு. இதனை விட சர்வதேச நாணய நிதியத்தை தான் இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு பெரிதும் நம்பியுள்ளது. 'சீனாவுக்கான கடன் மறுசீரமைப்பைச் செய்து கொண்டு வாருங்கள்' என்ற நிபந்தனை ஒன்றை ஐ.எம்.எப். போட்டுள்ளது. ஆக, சீனாவையும் பகைக்க முடியாத நிலை.

இவ்வாறு இக்கட்டான நிலையில் ரணில் திண்டாடிக்கொண்டிருக்கும் போது, இவ்விடயத்தில் இப்போது அமெரிக்காவும் தலையை நீட்டியுள்ளது. இந்தக் கப்பலை அனுமதிக்கக் கூடாது என அமெரிக்கா தெரிவிக்கவுள்ளது. இந்த ஆட்சேபனையை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜீலி சாங் இலங்கை வெளிவிவகாரத்துறை அமைச்சிடம் தெரிவிக்க திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறானதொரு சம்பவம் இடம் பெற்றால் அது இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக நிகழும் என்றும்இ இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் பாரதூரமான சம்பவமாக இது அமையும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசாங்கம் அனைத்துலக நாணய நிதியத்திடம் ஆதரவை கோரிய வேளையில்இ அந்த நிதியில் வலுவான செல்வாக்கு செலுத்தக்கூடிய மற்றும் அதற்கு பெரும் பங்களிப்பை வழங்கும்

(22ம் பக்கம் பார்க்க)



# “கோ ஹோம் சம்பந்தன்” செல்வத்தின் கலகக்குரல்! கூட்டமைப்புக்கு கூட்டுத் தலைமை சாத்தியமா?

கட்டுரையாளர்:
ஈழநாட்டிற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து
– பார்த்தீபன் –

ரணில் விக்கிரமசிங்கவுக்கா அல்லது டல்லஸ் அழகப்பெருமவுக்கா வாக்களிப்பது என்பதில் ஆரம்பமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்வீட்டுக் கலகம் இப்போது, தலைமைப் பதவியிலிருந்து சம்பந்தன் வெளியேற வேண்டும் என செல்வம் அடைக்கலநாதன் பகிரங்கமாகக் கோரிக்கை முன்வைக்கும் நிலைக்கு வளர்ந்திருக்கின்றது. செல்வத்தின் இந்தக் கோரிக்கை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

சம்பந்தன் கூட்டமைப்பின் தலைமைப் பதவியிலிருந்தும் விலகி புதிய தலைமை ஒன்றுக்கு வழி விட வேண்டும் என்ற கருத்து நீண்ட காலமாகவே முன் வைக்கப்பட்டு வருகின்றது. ஆனால், கடந்த மாதம் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது இடம் பெற்ற சம்பவங்கள் கூட்டமைப்புக்கு பலமான ஒரு தலைமை தேவை என்பதை தெளிவாக உணர்த்தியிருக்கின்றது.

ஆனால், இதற்கான சாத்தியம் உள்ளதா என்பது தான் இன்று எழும் மிகப் பெரிய கேள்வி!



யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பான சர்ச்சைக்கு கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழுவால் உடனடியாகத் தீர்வைக் காணமுடியவில்லை. டல்லஸ் அழகப்பெருமவை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் எடுத்திருந்தார். அதனைத் தான் கூட்டமைப்பின் நிலைப்பாடாக மாற்றுவதற்கு அவர் பகிரத முயற்சிகளை முன்னெடுத்தார்.

சம்பந்தன், சுமந்திரன், சாணக்கியன் ஆகிய மூவரையும் தவிர ஏனைய ஏழு எம்.பி.க்களும் லட்லஸை ஆதரிப்பதில்லை என்ற நிலைப்பாட்டில் தான் இருந்தார்கள். ரணில் விக்கிரமசிங்கவுடன் அண்மைக் காலத்தில் அவருக்கு ஏற்பட்டிருந்த தனிப்பட்ட முரண்பாடுகளே இதற்குக் காரணமாகச் சொல்லப்படுகின்றது.

முதல்நாள் நடைபெற்ற பாராளுமன்றக் குழுவின் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படாமையால் மறுநாள் – அதாவது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு முதல்நாள் – அதாவது ஜீலை 20 இரவு பாராளுமன்றக்குழு மீண்டும் கூடியது. அது குறித்து தான் இன்று வரையில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது. கூட்டமைப்புக்குள் பிளவு பாரதூரமாக உருவாகியிருந்த நிலையில், டல்லஜீக்கு ஆதரவு என்ற நிலைப்பாட்டை கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழு எடுப்பதற்கு இரண்டு உபாயங்களை சுமந்திரன் கையாண்டார்.

முதலாவதாக டல்லஸை ஆதரிக்க வேண்டும் என்பது தான் இந்தியாவின் நிலைப்பாடு என சுமந்திரன் தெரிவித்தார். அத்துடன், அதனை உறுதிப்படுத்தும் வகையில் இந்தியத் தூதரக அதிகாரி ஒருவருடன் தொடர்பை ஏற்படுத்தி தொலைபேசியில் ஸ்பீக்கரில் விட்டு சுமந்தின் கதைத்தாகச் சொல்லப்படுகின்றது. இந்த உரையாடல் குறித்த தகவல் சில நிமிடங்களிலேயே ரணில் விக்கிரமசிங்கவை சென்றடைந்தது. சீற்றமடைந்த ரணில் உடனடியாகவே இந்திய தூதரக அதிகாரி ஒருவருடன் இது தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தார். இந்த விவகாரம் ஒரு இராஜதந்திர சாச்சையை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இப்போது ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்தியாவின் நிலைப்பாடு இது தான் என்பதை சுமந்திரன் உறுதிப்படுத்திய நிலையில், எதிராக நின்ற எம்.பி.க்கள் சற்று அமைதியாகி விட்டனர். ஆனால் அடுத்த நகர்வையும் சுமந்திரன் முன்னெடுத்தார். டல்லஸ், சஜித் தரப்பினரை அவசரமாக கூட்டமைப்பின் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த சம்பந்தனின் இல்லத்துக்கு அழைத்த சுமந்திரன், அவர்களுடன் நேரில் பேசி உடன்பாடு ஒன்றுக்கு வருமாறு சக எம்.பிக்களைக் கேட்டுக் கொண்டார். கூட்டமைப்பினரால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்த 10 அம்சக் கோரிக்கையை இதன் போது ஏற்றுக்கொண்ட டல்லஸ், சஜித் தரப்பினர் கூட்டமைப்பினரின் வலியுறுத்தலினால் அதில் கையொப்பமிட்டுக் கொடுத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதனையடுத்தே டல்லஸை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டை கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவித்தது.

ஆனால், இரகசிய வாக்கெடுப்பின் போது ஐந்து கூட்டமைப்பு எம்.பி.க்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து வாக்களித்ததாகச் சொல்லப்படுகின்றது. ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்பார்க்கப்பட்டதை விட அதிகமான வாக்குகள் (134) கிடைத்தமை இதனை உறுதிப்படுத்துகின்றது.

இருந்த போதிலும் இரகசிய வாக்கெடுப்பு என்பதால் இறுதி வரையில் யார் யார் அவ்வாறு கூட்டமைப்பின் தீர்மானத்தை மீறி வாக்களித்திருப்பார்கள் என்பதை கண்டு பிடிக்க முடியாது. ஆனால், கூட்டமைப்பின் தலைமை எடுக்கக்கூடிய தீர்மானம் எதனையும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளும் நிலையில் அதன் எம்.பி.க்கள் இல்லை என்பதை இச்சம்பவம் உறுதிப்படுத்தியது.

கூட்டமைப்பு என்பது பதிவு செய்யப்படாத – கட்டமைப்புக்கள் எதுவும் இல்லாத ஒரு அமைப்பு. இதன் பிதான பங்காளியாக இரக்கின்ற தமிழரசுக் கட்சியின் தலைமை இதனைப் பதிவு செய்வதற்கோ அதற்கன கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கோ விரும்பவில்லை. தமது மேலாதிக்கம் குறைந்து விடும் என்ற அச்சம் இதற்குக் காரணம். அதேவேளையில் சம்பந்தன் கூட்டமைப்பின் தலைவர் எனச் சொல்லப்பட்டாலும் கூட, அவ்வாறு அவர் தலைவராக ஒரு போதும் தெரிவு



செய்யப்பட்டவரல்ல. கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவின் தலைவராகவே அவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அதனைத் தான் கூட்டமைப்பின் தலைவர் எனக் கூறுகின்றார்கள்.

பாராளுமன்றக்குழுவின் தலைவராக அவர் இருக்கின்ற போதிலும் அவர் பாராளுமன்றத்துக்கு வருவது மிகவும் குறைவு. அவரது சொந்தத் தொகுதியான திருமலைக்கும் அவர் செல்வதில்லை. கொழும்பு – 7 இல் அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்ட சொகுசு மாளிகையில் தான் அவர் இருக்கின்றார். வயது மூப்பும், அதனால் ஏற்பட்டுள்ள உடல் சுகவீனங்களும் அவரை செலிழந்தவராக்கியுள்ளது. செவிப்புலனையும் அவர் பெருமளவுக்கு இழந்திருக்கின்றார். அதனை விட அவர் சொல்வதைப் புரிந்து கொள்வதும் சிரமமானது. இதனால், அவரது பணிகள் பெரும்பாலானவை சுமந்திரனால் தான் முன்னெடுக்கப்படுகின்றது.

குறிப்பாக இராஜதந்திரிகளுடனான சந்திப்புக்களை சுமந்திரன் தன் விருப்பப்படி முன்னெடுப்பதாகவும், முடிவுகளையும் தன்னிஸ்டத்துக்கே எடுப்பதாகவும் சொல்லப்படுகின்றது. பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் பெருமளவுக்கு பார்வையாளர்களாகவே உள்ளனர்.

தமிழரசுக் கட்சியின தலைவராக உள்ள மாவை சேனாதிராஜாவோ கட்சியில் என்ன நடைபெறுகின்றது என்பதை யிட்டு எதுவும் தெரியாதவராகவே இருக்கின்றார். சம்பந்தன் இல்லத்தில் நடைபெற்ற நள்ளிரவுச் சந்திப்பு குறித்த செய்திகள் கூட அவருலுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பதை முடிவெடுப்பதில் கூட எந்தவிதமான செல்வாக்கையும் செலுத்தக்கூடியவராக அவர் இருக்கவில்லை.

இந்தப் பின்னணியில் தான் கடந்த வாரம் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டிருந்த செல்வம் அடைக்கலநாதன் அதிரடியான கருத்தை முன்வைத்தார். ‘கூட்டமைப்பின் தலைமைப் பதவியிலிருந்து சம்பந்தன் விலக வேண்டும். கூட்டுத் தலைமையே கூட்டமைப்புக்கு பொருத்தமானது.

அதாவது பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் சுழற்சி அடிப்படையில் தலைமைப் பதவியை வகிக்க வேண்டும்’ என்பது தான் செல்வத்தின் கருத்து. இது போன்ற கருத்துக்கள் ஏற்கனவே முன் வைக்கப்பட்டிருந்தாலும் – செல்வத்தின் கருத்து தமிழ் அரசியல் பரப்பில் அதிர்வலைகளை ஏற்படுத்தியமைக்கு பல காரணங்கள் உள்ளன. முக்கியமாக பங்காளிக் கட்சி ஒன்றின் தலைவர் பகிரங்கமாகவே இவ்வாறு கருத்துத் தெரிவித்திருப்பது இதுதான் முதல் முறை.

இவ்வாறான கருத்தை செல்வம் வெளியிட்டமைக்கு காரணம் என்ன என, ரெலோ பேச்சாளர் சுரேந்திரன் குருசுவாமியிடம் கேட்டபோது அவர் பின்வருமாறு பதிலளித்தார்:

கூட்டமைப்புக்குள் பல சர்ச்சைகளும் தெளிவற்ற நிலைமைகளும் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. சம்பந்தன் ஐயாவின் தற்போதைய உடல் நிலை தான் இதற்கு காரணம். கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுவின் கூட்டம் கூட இப்போது நடைபெறுவதில்லை. முடிவுகள் எட்டப்படுவதில்லை. இந்த நிலைமையை சம்பந்தன் ஐயா தானாகவே விளங்கிக் கொண்டு தலைமைப்பதவியிலிருந்து விலகி ஒரு கூட்டுத் தலைமையாக கூட்டமைப்பின் மூன்று பங்காளிக் கட்சிகளும் இணைந்து செயற்படுவதற்கு வழிவிடும் போது தான் கூட்டமைப்பின் ஒற்றுமையும் பலப்படும். மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய குழப்பங்களும் தீரும்.

அத்துடன் நாங்கள் அரச தரப்போடும் சர்வதேசத்தோடும் பிராந்திய வல்லரசோடும் தொடர்ந்து எங்களுடைய வேலைத்திட்டங்களை விரைந்து முன்னெடுப்பதற்கு உதவும், எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகளை துரிதமாக முன்னெடுக்கவும் இது அவசியம் என்ற நோக்கத்திலேயே அந்தக் கருத்து முன் வைக்கப்பட்டது.’

இவ்வாறு குருசுவாமி பதிலளித்திருந்தார். இதே கருத்தைத் தான் புளொட் அமைப்பும் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. முக்கியமாக சம்பந்தனின் இயலாமையைப் பயன்படுத்தி சுமந்திரன் தமது அரசியலை முன்னெடுத்து வருவதையும், சும்பந்தன் இதனைத் தெரிந்து கொண்டும் சும்மா இருப்பதும் மாவையின் பலவீனமான தலைமையும் தான் இந்த நிலைமைக்கு காரணம். செல்வம் ஒரு கலகக் குரலை எழுப்பியுள்ளார். ரெலோ, புளொட் ஆகிய பங்காளிக் கட்சிகள் மட்டுமன்றி, தமிழரசுக் கட்சியின் கீழ் மட்ட உறுப்பினர்கள் மத்தியில் கூட இவ்வாறான நிலைப்பாடு தான் காணப்படுகின்றது. சம்பந்தன் இதற்குப் பதிலளிக்கப் போவதில்லை.

ஆனால், அடுத்த தலைமைக்கான கட்டமைப்புக்களை உருவாக்காது விட்டால், கூட்டமைப்பு கடும் நெருக்கடிகளை சந்திக்க வேண்டியிருக்கும் என்பது மட்டும் உண்மை. அடுத்த கட்டத் தலைமையை உருவாக்குவதும் ஒரு தலைவனின் முக்கிய பொறுப்பு என்பதை சம்பந்தன் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அல்லது சுமந்திரன்தான் அடுத்த கட்டத்துக்கான தலைவர் என சம்பந்தன் கருதிக் கொண்டிருக்கின்றாரா என்பதும் தெரியவில்லை.

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

10 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

30 யூலை 2022 முதல் 05 ஆகஸ்ட் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:-

ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கமலம் சுப்பிரமணியம்

அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலம் சுப்பிரமணியம் அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 03 ஆகஸ்ட் 2022 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கமலம் சுப்பிரமணியம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 20வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் முகுந்தன் குலசிங்கம்

அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்வன் முகுந்தன் குலசிங்கம் அவர்களது இருபதாவது ஆண்டு நினைவு நாள் 03 ஆகஸ்ட் 2022 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் பெற்றோர்கள், உறவுகள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் முகுந்தன் குலசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு குமாரசாமி துரைராசா

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு குமாரசாமி துரைராசா அவர்களது 31வது ஆண்டு நினைவு நாள் 05 ஆகஸ்ட் 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு குமாரசாமி துரைராசா அவர்களது ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு துரைராஜா ரவீந்திரன் (துரைரவி)

புங்குடுதீவு 7ம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு துரைராஜா ரவீந்திரன் அவர்களது முதலாம் ஆண்டு நினைவு நாள் 06 ஆகஸ்ட் 2021 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு துரைராஜா ரவீந்திரன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நன்னித்தம்பி தயாசீலன்

அச்சுவேலி தோப்பைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நன்னித்தம்பி தயாசீலன் (சீலன்) அவர்களது முதலாமாண்டு நினைவு நாள் 08 ஆகஸ்ட் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு நன்னித்தம்பி தயாசீலன் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு பாலசுந்தரம் இராமலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்)

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு பாலசுந்தரம் இராமலிங்கம் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 06 ஆகஸ்ட் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் பாலசுந்தரம் இராமலிங்கம் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




30 யூலை 2022 சனிக்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இராஜேஸ்வரி செல்வராசா அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது மகள் யசோதரா பரமேஸ்வரன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்.




02 ஆகஸ்ட் 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி அவர்களின் பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி அவர்கள் தனது குடும்பத்தினருன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




03 ஆகஸ்ட் 2022 புதன்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்வன் முகுந்தன் குலசிங்கம் அவர்களது 20வது ஆண்டு நினைவாகவும் திருமதி கமலம் சுப்பிரமணியம் அவர்களது 10வது ஆண்டு நினைவாகவும் அன்னார்களது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




03 ஆகஸ்ட் 2022 புதன்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்வன் முகுந்தன் குலசிங்கம் அவர்களது 20வது ஆண்டு நினைவாகவும் திருமதி கமலம் சுப்பிரமணியம் அவர்களது 10வது ஆண்டு நினைவாகவும் அன்னார்களது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.





30 யூலை 2022 சனிக்கிழமை கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த வதனி என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி பிறிட்டிக்கா சுகுமார் அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 04 ஆகஸ்ட் 2022 வியாழக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




05 ஆகஸ்ட் 2022 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு குமாரசாமி துரைராஜா அவர்களது 31வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்.

## மூன்றாவது
## பிறந்த நன்நாள் வாழ்த்து



### செல்வன்
### டெல்ரன் ரஞ்ஜித் சங்கர்

கனடாவில் வசிக்கும் திரு திருமதி சங்கர் ஜெலியா தம்பதிகளின் செல்வப்புதல்வன் டெல்ரன் ரஞ்சித் சங்கரின் மூன்றாவது பிறந்த நன்நாள் 09 ஆகஸ்ட் 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாட வுள்ள செல்வன் டெல்ரன் ரஞ்சித் சங்கர் தனது பெற்றோர்கள், பேரன் பேத்திமாரோடு இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கும் சிறப்பு உணவு வழங்கி மகிழவுள்ளார். அகவை மூன்று காணும் செல்வன் டெல்ரன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தும் அவரது பெற்றோர்கள், உற்றார், உறவினர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் வாழ்த்து கின்றார்கள். வாழ்க வளமுடன்!

கோலாகல இசைமழையுடன்
ஓர் நூல் வெளியீடு....

திறந்த வெளியரங்கில் மாலை 5 மணிமுதல்
உலகத் தமிழர்களின் அன்பு அறிவிப்பாளர்
B.H.அப்துல் ஹமீத்
அவர்கள் எழுதிய
வானலைகளில் ஒரு வழிப்போக்கன்
(இது வானொலி வரலாற்றின் ஆவணப் பதிவு)
நூல் வெளியீடு.


S.K.ராஜன்

DATE : AUGUST-12
PLACE : MARKHAM MEADOW
8100 STEELS AVE


மதுமிதா

உங்கள் அபிமானத்துக்குரிய இந்திய - கனேடியக் கலைஞர்கள்
வழங்கும்....
ஆடலும் - பாடலும் இணைந்த
கலைவிருந்தும் உண்டு.
அழைப்பிதழ்
திரு / திருமதி......................................
அன்புடையீர்!
உலகெங்கும் வாழும் தமிழ் மக்களது அன்புக்குரிய
அறிவிப்பாளர்
திரு. B.H.அப்துல் ஹமீத் அவர்கள் எழுதிய
'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்'
எனும் வானொலி வரலாற்று
ஆவணப் பதிவு நூல் வெளீடு,
எதிர் வரும் ஆகஸ்டு 12 மாலை 5 மணிக்கு
ஆடல்-பாடல் கலைநிகழ்வுகளோடு
நடைபெறும் இந்நிகழ்வில்
கலந்து கொள்ளவருமாறு
உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

அனுமதி இலவசம்! தமிழோசை - சினி மீடியா!!

416 5563219

# வீடு மற்றும் வாகன காப்புறுதி
# HOME & AUTO INSURANCE

வீடு — HOME
வாகனம் — AUTO
மோட்டர் சைக்கிள் — MOTOR CYCLE
படகு — BOAT
கனரக வாகனம் — TRAILER

காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்





TR
FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!
**THUSHANTHAN RAVINDRAN**
**647-401-2653**



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial*
- *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

உ
சிவமயம்

# அருள்மிகு ரொறன்ரோ திருச்செந்தூர் முருகப்பெருமான் ஆலய
## சுபகிருது வருட மகோற்சவ விஞ்ஞாபனம் - 2022



சகலவளங்களும் ஒருங்கே அமையபெற்ற ஒன்ராறியோ மாகாண நோர்த் யோர்க் நகரத்தில் கோவில் கொண்டு வேண்டுவோருக்கு வேண்டும் வரத்தை அள்ளிக் கொடுக்கும் திருச்செந்தூர் முருகனுக்கு நிகழும் சுபகிருது வருடம் ஆடிமாதம் 20ஆம் நாள் 04/08/2022 வியாழக்கிழமை சுக்லபட்ச ஷப்தமி திதியும் சுவாதி நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் கொடியேற்றத்துடன் பதினொரு தினங்கள் பிரமோற்சவம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. பக்தர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு எம்பெருமான் திருவருளை பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

### துவஜாரோகணம் (கொடியேற்றம்)

காலை 7:00 மணிக்கு கும்பபூஜை
9:00 மணிக்கு விஷேடபூஜை
9:30 மணிக்கு வசந்த மண்டப பூஜை
11:00 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்)
04-08-2022 வியாழக்கிழமை

### தேர்த்திருவிழா

13-08-2022 சனிக்கிழமை காலை
5:00 மணிக்கு ஆலய பூஜை 05:30 மணிக்கு கும்பபூஜை
07:00 மணிக்கு விஷேட பூஜை
8:00 மணிக்கு வசந்தமண்டப பூஜை
நண்பகல் 10:00 மணிக்கு இரத ஆரோகணம்
13-08-2022 சனிக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | 04-08-2022 வியாழக்கிழமை | சப்பறம் | 12-08-2022 வெள்ளிக்கிழமை |
| தேர்த் திருவிழா | 13-08-2022 சனிக்கிழமை | தீர்த்தம் | 14-08-2022 ஞாயிற்றுக்கிழமை |
| பூங்காவனம் | 15-08-2022 திங்கட்கிழமை | வயிரவர் மடை | 16-08-2022 செவ்வாய்க்கிழமை |

### உற்சவகால பூஜை நேரங்கள்

| காலை | மாலை |
|---|---|
| 08:00 மணிக்கு ஆலய பூஜை | 05:30 மணிக்கு அபிஷேகம் |
| 08:30 மணிக்கு சங்கல்ப்பம், கும்பபூஜை, அபிஷேகம் | 07:00 மணிக்கு ஆலய பூஜை |
| 10:00 மணிக்கு ஆலய பூஜை | 08:00 மணிக்கு வசந்தமண்டப பூஜை |
| 11:30 மணிக்கு வசந்தமண்டப பூஜை | |

இங்ஙனம் ஆலய அறங்காவலர் சபை

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்
# Toronto Thiruchendur Murugan Temple

19 Penn Dr, North York, ON M9L 2A7. Tel: 416-744-9568

சுபம்

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி
கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி
ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth



# OM SIVA SHAKTHI ASTROLOGER CENTER



## MASTER: KASHI GURUJI
OVER 40+ YEARS OF EXPERIENCE

அனைத்து மதத்தினரும் வரவேற்கப்படுகிறார்கள்.
Black Magic Removal in 24hours.
100% முடிவு உத்தரவாதம்.
வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பு.
PRIVATE & CONFIDENTIAL
7 நாட்களும் திறந்திருக்கும்.
Call for Appointment

கைரேகை, எண்ஜோதிடம்,
ஜாதகம் விளக்கம்,
வெத்திலையில்
மை போட்டுப் பார்த்தல்,
இறந்தகாலம், நிகழ்காலம்,
எதிர்காலம் பற்றி அறிதல்.
Specialist in bringing backloved ones.

- ★ கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை
- ★ சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு
- ★ பிள்ளைகளின் திடீர் குணமாற்றங்கள்
- ★ லட்சுமி கடாட்சம், வாகனம், மனைப் பொருத்தம்
- ★ திருமணயோகம், காதல் விவகாரங்கள்
- ★ விசா பிரச்சனைகள், கோர்ட் வழக்கு
- ★ ஆரோக்கியம், செய்வினை கோளாறு
- ★ தொழில், மனை அபிவிருத்தி, முன்னேற்றம்
- ★ பேய், பிசாசு, எதிரிகள் தொந்தரவு
- ★ கண் திருஷ்டி, நாக தோசம் போன்ற

சகல பிரச்சனைகளுக்கும் தீர்வு உண்டு.
உடனே பண்டித் காசி குருஜியை சந்திக்கவும்.



647-324-9991 | 437-833-7796

Unit 16-2857 Lawrence Ave East
Scarborough, ON M1P 2S8

2891 A Derry Road East
Mississauga, ON, L4T 1A6

# தந்திரம் பழகு!

அரசியல் என்பது சதுரங்கத்தை விட மேலானது. அது துடுப்பாட்டத்தைப் போல ஒரு குழுச் செயற்பாடு. மரதன் ஓட்டத்தைப் போல அதற்கு ஒரு திராணி இருக்க வேண்டும். நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். அது ரகர் விளையாட்டைப் போல கடினமானது, குத்துச் சண்டையைப் போல இரத்த விளையாட்டு இது ரணில் விக்கிரமசிங்க கூறியது. அவர் சதுரங்கம் விளையாடுவது போன்ற ஒரு காணொளியின் பின்னணியில் இவ்வாறு கூறுகிறார். இந்த வசனங்களை அவருக்கு எழுதிக் கொடுத்தது தமிழ் ஊடக முதலாளியான ராஜமகேந்திரன் என்று அவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகிறார்கள்.

இப்பொழுது ரணில் ஆட்சிக்கு வந்திருக்கிறார். மஹிந்தவை,கோட்டாவை நீக்கியது போல ரணிலையும் அரகலியக்காரர்கள் துரத்துவார்களாக இருந்தால் நிலைமை வேறு. இல்லையென்றால் அடுத்த இரண்டு வருடத்திற்கும் நான்கு மாதங்களுக்கும் அவர் தான் ஜனாதிபதி தமிழ் மக்கள் அவரோடு தான் பேச வேண்டும். அவரோடு தான் போராடவும் வேண்டும்.

அவர் ஒரு நரி என்று அன்ரன் பாலசிங்கம் கூறினார். அவருடைய மாமனார் ஜெயவர்த்தனாவையும் குள்ளநரி என்று அழைப்பார்கள். இப்பொழுது அரகலியக்காரர்களும் அவரை குள்ளநரி என்று அழைப்பதாக தகவல்.

அரகலவின் மீது அவர் தாக்குதலை நடாத்த முன்னரே மனோகணேசன் அது தொடர்பாக ஒரு குறிப்பை முகநூலில் போட்டிருந்தார்.

ஓர் அரசியல்வாதியை ஏன் நரி என்று அழைக்க வேண்டி வருகிறது? ஏனென்றால் அவர் தந்திரம் செய்கிறார் என்பதனால். ஓர் அரசியல்வாதி ஏன் தந்திரம் செய்கிறார்? ஒன்றில் தன்னை காப்பாற்றச் செய்கிறார். அல்லது தன் கட்சியைக் காப்பாற்றச் செய்கிறார்.அ ல்லது தன் மக்களைக் காப்பாற்றச் செய்கிறார். ரணில் யாருக்காக தந்திரங்கள் செய்கிறார்? தனக்காகவா? கட்சிக்காகவா? நாட்டுக்காகவா? மூன்றுக்கும் ஆகத் தான். இதை இன்னும் தெளிவாகச் சொன்னால் அவர் சிங்கள மக்களுக்காக சிங்கள பௌத்த அரசை காப்பாற்றுவதற்காக தந்திரங்கள் செய்கிறார் என்று எடுத்துக் கொள்ளலாம்.

இலங்கைத் தீவு ஒரு குட்டித்தீவு. இந்து மகாசமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவம் மிக்க ஒரு கடல்வழியில் அமைந்திருக்கிறது. ஒருபுறம் பிராந்தியப் பேரரசு. இந்தியப் பேரரசின் செல்வாக்கு வலையத்துக்குள் இலங்கை காணப்படுகிறது. அதே சமயம் சீனாவின் பட்டியும் பாதையும் வியூகம், அதற்கு எதிரான அமெரிக்காவின் இந்தோ பசுபிக் வியூகம் ஆகிய இரண்டு வியூகங்களும் ஒன்றை மற்றதை வெட்டும் புள்ளியில் இலங்கை காணப்படுகிறது.

அதாவது மூன்று பேரரசுகளின் இழிவிசைகளுக்குள் சிக்குண்டிருக்கும் ஒரு குட்டித்தீவு. இது காரணமாக இச்சிறிய தீவின் தலைவராக வரும் யாரும் தந்திரந்தான் செய்யலாம். வீரங்காட்ட முடியாது. புஜபல பராக்கிரமத்தை காட்டமுடியாது. உக்ரைனின் தலைவர் செலென்ஸ்கி போல வீரங் காட்டுவது என்று சொன்னால் அதற்கு அமெரிக்காவும் நேட்டோவும் ஐரோப்பிய யூனியனும் பின்னால் நிற்க வேண்டும்.

ஆனால் இலங்கைத்தீவின் நிலைமை அப்படியல்ல. ராஜபக்சக்கள் அதற்கு ஆகப்பிந்திய முன்னுதாரணம். எனவே சிறிய இலங்கைத் தீவின் தலைவராக வரும் ஒருவர் அதிலும் குறிப்பாக உள்நாட்டில் மக்களாணை இல்லாத ஒருவர் ஜனவசியம் குறைந்த ஒருவர், என்ன செய்யலாம்?

ரணில் இயல்பாகவே புஜபல பராக்கிரமத்தைக் காட்டுபவர் அல்ல. அதற்குரிய தோற்றமும் அவருக்கு இல்லை. ராஜபக்சக்களைப் போல அட்டகாசமான



ஜனவசிய அரசியல் அவருக்குக் கைகூடி வராது. அதற்குத் தேவையான மிடுக்கான தோற்றமும் அவருக்கு இல்லை. சோர்ந்த வாடிய தோற்றம். அழுத்தம் இல்லாத குரல். புத்திசாலித்தனமாக ஆனால் கவர்ச்சியற்ற குரலில் கதைப்பார்.

சிங்களபௌத்த பெருந் தேசியவாதத்தின் உள்நாட்டு ஆடைகளான வேட்டி நஷனலோடு அவரைக் காணமுடியாது. எப்பொழுதும் மேற்கத்திய தோற்றத்தோடு தான் காணப்படுவார். ஒரு சிங்கள பௌத்தராக இருந்த போதிலும் கடும்போக்கு சிங்களவர்கள் அவரை கிறிஸ்தவ பின்னணியோடு பொருத்தித் தான் பார்க்கிறார்கள். அவரை சிங்கள பௌத்தத்தின் விட்டுக் கொடுப்பற்ற காவலனாகப் பார்க்கவில்லை.

நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளில் தொடங்கி இன்று வரையிலும் அவர் உள்நாட்டில் மிகப் பலவீனமான ஒரு தலைவர். சிங்கள பௌத்தத்தின் தந்திரமான முகத்துக்குத் தான் அவர் தலைமை தாங்கலாம். சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் கூட்டு உளவியலானது அட்டகாசமான யுத்த வெற்றி வாதத்துக்கு தலைமை தாங்கும் தலைவர்களைத் தான் தெரிவு செய்தது. ஆனால் யுத்தவெற்றி நாயகர்கள் நாட்டின் கருவூலத்தைத் திருடியதால் வந்த விளைவினால் ரணிலுக்கு லொத்தர் விழுந்தது. இது அவருடைய வாழ்வின் கடைசி ஓவர். இந்த ஓவரிலாவது அவர் தன்னை நிலைநிறுத்த வேண்டும்.

அவருடைய முதலாவது பலம் புத்திசாலித்தனம். இரண்டாவது பலம் அவருக்கு மேற்கு நாடுகளின் மத்தியில் உள்ள அங்கீகாரம். இந்த இரண்டுமே தமிழ் மக்களின் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் பாதகமானவை. அவர் புத்திசாலித்தனமாக தமிழ் அரசியலைக் கையாள்வார். புத்திசாலித்தனமாக மேற்கத்திய அரங்கில் தமிழ் லொபியைக் கையாள்வார்.

இதை எதிர்கொள்ள தமிழ்மக்கள் நாட்டுக்குள்ளேயும் வெளியேயும் என்ன செய்ய வேண்டும்? தமிழ் மக்களும் தந்திரம் செய்ய வேண்டும். தனது புத்திசாலித்தனத்தையும் சூழ்ச்சிகளையும் தன்னுடைய பலமாகக் கருதும் ஒரு தலைவருக்கு அதே மொழியில் தமிழ்மக்கள் பதில் கூற வேண்டும்.

சிங்கள மக்களைப் போலவே, தமிழ் மக்களும் பேரரசுகளின் முத்தரப்பு இழுவிசைகளுக்குள் சிக்குண்டிருக்கும் சிறிய மக்கள் கூட்டம் ஆவர். சிங்கள மக்களைப் போலன்றி அரசற்ற ஓரினம். எனவே தமிழ்மக்கள் தான் அதிகம் தந்திரம் செய்ய வேண்டும்.

மு.திருநாவுக்கரசு, பேராசிரியர் சிவத்தம்பி போன்றவர்கள் கூறுவார்கள், எதிரி தான் தமிழ்த் தேசியத்தின் பலம் என்று. அதாவது அடக்குமுறை தான் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுகிறது என்ற பொருளில். அதாவது, வெளிப்படையான இனவாதி தென்னிலங்கையில் ஆட்சிக்கு வரும்பொழுது அது தமிழ் மக்களை பலப்படுத்தும் என்றும், லிபரல் முகமூடி அணிந்த இனவாதி ஆட்சிக்கு வரும் பொழுது அது அனைத்துலக அளவில் தமிழ் மக்களுடைய நியாயத்தை பலவீனப்படுத்தும் என்றும் தமிழ்மக்களில் பெரும்பகுதியினர் நம்புகிறார்கள். ஆனால் இங்கே பிரச்சனை என்னவென்றால் வெளிப்படையான இனவாதியோ அல்லது மனித முகமூடி அணிந்த இனவாதியோ யாராக இருந்தாலும் தமிழ் மக்கள் செயல்பட வேண்டும். தமிழ்மக்கள் போராட வேண்டும். தமிழ்மக்கள் செயல்படாதவிடத்து தென்னிலங்கையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் எதுவும் நடக்கப் போவதில்லை என்பதைத் தான் கடந்த 13ஆண்டுகள் நிரூபித்திருக்கின்றன.

இப்பொழுது மனித முகமூடி அணிந்த சிங்களபௌத்த பெருந்தேசிய வாதியான ரணில் ஆட்சிக்கு வந்திருக்கிறார்.அவர் மனித முகமூடி அணிந்திராத வெளிப்படையான இனவாதக் கட்சியான தாமரை மொட்டு கட்சியின் ஆதரவில் தங்கியிருக்கும் ஒரு ஜனாதிபதி.

பொருளாதார நெருக்கடிகளின் விளைவுகளின் விளைவு அவர். பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்பட்ட மக்கள் எழுச்சிகளின் – அரகலயவின் – விளைவாகத் தான் அவருக்கு இந்த பதவி கிடைத்தது. அரகலய அவரையும் அகற்றவேண்டும் என்று போராடுகிறது. அண்மை நாட்களாக அரகலயவை அச்சுறுத்தும் நோக்கத்தோடு ரணில் பல செயற்பாட்டாளர்களை கைது செய்து வருகிறார். பலர் தலைமறைவாகி வருவதாகத் தெரிகிறது. இதன் மூலம் ஒன்றில் அரகலய புதிய வேகமெடுக்கும் அல்லது நீர்த்துப் போகும். அரகலயவை வெற்றிகரமாகக் கையாளாவிட்டால் ரணிலுடைய கனவுகள் நிறைவேறாது.

அதே சமயம் உள்நாட்டில் மிகவும் பலவீனமான ரணில் விக்ரமசிங்கவை மேற்கு நாடுகள் எப்படியும் பாதுகாக்க முயற்சிக்கும். மேற்கு நாடுகளை பொறுத்தவரை கத்தியின்றி, இரத்தமின்றி, தேர்தலின்றி ஓர் ஆட்சி மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. இந்த மாற்றத்தை எப்படியாவது பலப்படுத்தத் தான் அவர்கள் பார்ப்பார்கள்.

எனவே ரணிலை தோற்றுப் போக விட மாட்டார்கள். ரணிலை பாதுகாப்பதா? அல்லது தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதா? என்ற கேள்வி வரும் பொழுது மேற்குநாடுகள் இரண்டுக்கும் இடையில் ஒரு சமநிலையை கண்டு பிடிக்க முற்படும்.

இது ஏறக்குறைய 2015ல் இருந்து 2018 வரையிலும் காணப்பட்ட ஒரு நிலைமை



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –

தான். இது ஐநா மனித உரிமைகள் பேரவையிலும் எதிரொலிக்கும்.

எனவே ரணிலை எதிர் கொள்வதற்கு தமிழ் மக்கள் தயாராக வேண்டும். அவரை எதிர் கொள்வது என்பது தனிய அரகலயவோடு கைகோர்ப்பது மட்டுமல்ல. அதற்குமப்பால் அவருடைய தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் எதிர்கொள்வதற்கு தமிழ்மக்களும் அரசியலை அறிவுபூர்வமாக, விஞ்ஞானபூர்வமாக, கணிதமாக முன்னெடுக்க வேண்டும்.

ஒரு பெரிய இனத்தின் தலைவர், அரசுடைய இனத்தின் தலைவர், தந்திரசாலியாக இருக்கிறார் என்று சொன்னால், அரசற்ற சிறிய இனம் அதை விட அதிகமாகத் தந்திரத்தைக் கைக்கொள்ள வேண்டும். எங்களுடைய பக்கம் நீதி இருக்கிறது என்பதற்காக உலகம் எங்களை நீதியாக நடத்தும் என்று எதிர்பார்ப்பது அப்பாவித்தனமானது.

ஆபிரிக்கப் பழமொழியொன்று உண்டு” நீ நீதியாக இருப்பதனால் உலகம் உன்னிடம் நீதியாக நடந்து கொள்ளும் என்று எதிர்பார்க்காதே, அது, நீ சிங்கத்தைச் சாப்பிட மாட்டாய் என்பதற்காக சிங்கம் உன்னை சாப்பிடாது என்று நம்புவதைப் போன்றது என்று.

ஆம். தமிழ்மக்கள் தமது பக்கம் நீதி இருக்கிறது என்று நம்பிக் கொண்டு வாழாயிருக்க முடியாது. அரசியலை ஆகக் கூடிய பட்சம் அறிவுபூர்வமாக, விஞ்ஞானபூர்வமாக அணுக வேண்டும்.

நடந்து முடிந்த ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பு தமிழ்க்கட்சிகளின் இயலாமையை நிரூபித்திருக்கிறது. தமிழ்மக்கள் ஒரு தேசமாக இல்லை என்பதனை நிரூபித்த ஒரு வாக்கெடுப்பு அது.

அதேசமயம் சிங்களக்கட்சிகள் அரசியல் எதிரிகளாக இருந்த போதிலும் கூட தேவை கருதிய தந்திரோபாயக் கூட்டுக்களை ஏற்படுத்திக் கொள்ளமு டியும் என்பதனை நிரூபித்த ஒரு வாக்கெடுப்பு அது.

படித்த தமிழர்கள் சிங்கள மக்களை மோடையாக்கள் என்று கிண்டலாகக் குறிப்பிடுவதுண்டு. ஆனால் அது உண்மையல்ல, நடைமுறையும் அல்ல.

தமிழ் மக்கள் தான் முட்டாள்தனமாக அரசியல் செய்து வருகிறார்கள். தமிழ் மக்களிடம் தேர்தல்மைய அரசியலும் அதற்குரிய நெளிவு சுழிவுகளோடு இல்லை. மக்கள் இயக்கமும் இல்லை.

இப்பொழுது திரும்பவும் ரணில் வந்துவிட்டார். தமிழ்மக்கள் தந்திரம் பழக வேண்டும். தாங்கள் செய்ய விரும்புவதை எதிரியை கொண்டு செய்விப்பது தான் மென்சக்தி அரசியல்.

எதிரி செய்ய நினைப்பதைத் தானே செய்வது அப்பாவி வெள்ளாடுகளின் அரசியல். ரணில் ஒரு தந்திரமான நரி என்றால் தமிழ் மக்கள் அதை விடத் தந்திரமான நரிகளாக மாற வேண்டும். அப்பாவி வெள்ளாடுகளாக வெறுவாய் சப்பிக் கொண்டிருக்கக் கூடாது.

# எங்கிருந்தாலும் தப்ப முடியாது! ஜோ பைடன் தெரிவிப்பு!

அல்குவைதா அமைப்பின் தலைவர் அய்மன் அல்-ஜவாஹிரியை அமெரிக்கா கொன்றதாக அதிபர் ஜோ பிடன் உறுதிப்படுத்தியுள்ளார். ஆப்கானிஸ்தானில் ஆளில்லா விமானத் தாக்குதலில் அவர் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

11 ஆண்டுகளுக்கு முன்பு ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டதில் இருந்து அல்கொய்தா அமைப்பிற்காக சர்வதேச அளவில் தோன்றிய ஒரே தலைவராக ஜவாஹிரி அறியப்படுகிறார். ஆப்கானிஸ்தானின் காபூலில் பாதுகாப்பான வீட்டில் இருந்த போது அமெரிக்கப் படைகளால் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஜவாஹிரி தனது 71 வயதில் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அய்மன் அல் ஜவஹிரியை கொல்வதற்கான உத்தரவை பிறப்பிப்பதற்கு முன்னர் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஜவஹிரி எங்கு ஒளிந்திருக்கின்றார் என்ற விடயத்தை தனிப்பட்ட ரீதியில் அறிந்து கொள்ள விரும்பினார்.

ஜோ பைடனும் அவருக்கு நெருக்கமான குழுவினரும் பல மாதங்களாக மேற்கொண்ட இரகசிய திட்டமிடல்களின் விளைவாகவே காபுலில் அமெரிக்கா மேற்கொண்ட ஆளில்லா விமான தாக்குதலில் அய்மன் அல் ஜவஹிரி கொல்லப்பட்டார்.

தாக்குதலிற்கான முன் தயாரிப்பு நடவடிக்கைகளின் போது ஜவஹிரி மறைந்திருந்த வீட்டின் மாதிரியை புலனாய்வு பிரிவினர் உருவாக்கி அதனை வெள்ளை மாளிகையில் பைடனின் அறைக்குள் வைத்தனர். அவர் தாக்குதலிற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்வதற்கு உதவியாக இதனை அவர்கள் உருவாக்கினர்.

உலகின் மிகவும் தேடப்பட்ட செப்டம்பர் 11 தாக்குதலின் சூத்திரதாரியை கொல்லும் போது ஆப்கான் தலைநகரில் அப்பாவி பொதுமக்களையும் கொல்ல வேண்டிய ஆபத்தை பைடன் எதிர்கொண்டார்.

கடந்த வருடம் அமெரிக்கா இராணுவம் படையினரை ஆப்கானில் இருந்து வெளியேற்றியது முதல் அவர் சந்தித்து வரும் உள்நாட்டு அரசியல் நெருக்கடிகளில் சிக்குண்டுள்ள ஜனாதிபதிக்கு இது ஒரு வெற்றித் தருணம்.

உலகெங்கலும் உள்ள மக்கள் இனி கொடிய உறுதியான கொலையாளி குறித்து அச்சப்படத் தேவையில்லை, எங்களிற்கு தீங்கிழைக்க முயல்பவர்களிடமிருந்து எங்கள் மக்களை காப்பாற்றுவதற்கான உறுதிப்பாட்டையும் திறனையும் அமெரிக்கா தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றது என வெள்ளை மாளிகையின் புளூருமின் பல்கனியிலிருந்து பைடன் தெரிவித்தார்.

காபுலில் உள்ள வீடொன்றில் ஜவஹிரி இருப்பது குறித்து முதலில் ஏப்ரல்



மாதம் ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டது, பல மாதங்களாக ஜவஹிரிக்கு ஆதரவு வழங்கி வரும் தரப்பினர் குறித்து அமெரிக்க அதிகாரிகள் அறிந்திருந்தனர். பல புலனாய்வு தரப்புகள் மூலம் ஜவஹிரியின் குடும்பத்தினரை அடையாளம் கண்டிருந்தனர் .(மனைவி மகள் குழந்தைகள்)

காபுலில் உள்ள ஜவஹிரியின் வீட்டிற்கு எவரும் தங்களை பின் தொடர்ந்து வருவதை தடுப்பதற்காக அந்த பெண் பயங்கரவாத தந்திரோபாயமொன்றை பயன்படுத்தினார் என அதிகாரிகள் கருதுகின்றனர். கடந்த வருடம் அந்த பகுதிக்கு வந்த பின்னர் ஜவஹிரி அந்த வீட்டை விட்டு வெளியே செல்லவில்லை.

மாதங்கள் கடந்ததும் அமெரிக்க அதிகாரிகள் அந்த வீட்டில் உள்ளவர்கள் செயற்படும் விதங்கள் குறித்த தெளிவானப்பதை உறுதி செய்வதற்கு அதிகாரிகள் முயன்றனர். இந்த விடயம் வெளியில் கசிவது குறித்து அவர்கள் அதிக கவலை கொண்டிருந்தனர், திட்டங்கள் குறித்து சிறிய தெரிவு செய்யப்பட்ட குழுவினருக்கு மாத்திரம் தகவல் தெரிந்திருந்தது.

ஜவஹிரி மீதான தாக்குதல் இரண்டு வருடத்திற்கு முன்னர் கடத்தப்பட்ட அமெரிக்க பிரஜையான மார்க் பிரெரிச்சை விடுவிக்கும் முயற்சிகளிற்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்பது குறித்து பைடன் கரிசனை கொண்டிருந்தார்.

மே ஜீன் மாதத்தில் பைடனிற்கு அதிகாரிகள் தகவலை வழங்கிய வண்ணமிருந்தனர்.

ஜீலை முதலாம் திகதி உத்தேச நடவடிக்கை குறித்து தெரிவிப்பதற்காக முக்கிய தேசிய பாதுகாப்பு அதிகாரிகளை பைடன் வெள்ளை மாளிகைக்கு அழைத்தார்.

அங்கு தெரிவிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் புலனாய்வு விபரங்களில் பைடன் மூழ்கிப்போனார்,என தெரிவித்த சிரேஸ்ட அதிகாரி அவர் எங்களிற்கு என்ன தெரியும் எப்படி தெரியும் என்பது குறித்து கேள்வி மேல் கேள்வி கேட்டார் என குறிப்பிட்டார்.

புலனாய்வு பிரிவினர் உருவாக்கி வெள்ளை மாளிகைக்கு கொண்டு வந்த ஜவஹிரியின் வீடு குறித்து பைடன் விசேடமாக கவனம் செலுத்தினார்.

சூரிய ஒளியில் வீடு எப்படி காணப்படும் வீடு எதனால் கட்டப்பட்டது, ஜவஹிரியை இலக்கு வைக்கும் நடவடிக்கையை காலநிலை எவ்வாறு பாதிக்கும் என பைடன் பல கேள்விகளை கேட்டார்.

பொதுமக்கள் கொல்லப்படுவதை தவிர்ப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன என்பதை உறுதி செய்வதில் பைடன் முக்கிய கவனம் செலுத்தினார் என அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அந்த கட்டிடத்தின் திட்டங்கள் தாக்குதல் அதனை எவ்வாறு பாதிக்கும் என்பது குறித்த மேலதிக விபரங்களை கோரிய பைடன் அன்று மதியம் காம்ப்டேவிட்டிற்கு சென்றார்.

ஆனால் அவரது குழுவினர் வெள்ளை மாளிகையில் தங்கியிருந்து பல தடவைகள் கூடி தங்கள் திட்டமிடல்களை பூர்த்தி செய்ய முயன்றனர்.

ஜனாதிபதியின் கேள்விகளிற்கு பதிலளிப்பதற்கும் உயிரிழப்புகளை குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதி செய்வதற்கும் அவர்கள் முயன்றனர்.

அதே வேளை ஜவஹிரி தொடர்பான புலனாய்வுகளை ஆராய்வதற்கும் தாக்குதலிற்கான சட்டபூர்வமான அடிப்படைகளை உருவாக்குவதற்குமான முயற்சிகளில் பைடனின் அதிகாரிகள் ஈடுபட்டனர்.

25ம் திகதி கொவிட் காரணமாக வெள்ளை மாளிகையில் தன்னை தனிமைப்படுத்தியிருந்த பைடன் இறுதியாக ஒரு முறை தகவல்களை பெறுவதற்காக தனது அணியினரை அழைத்தார்.

பைடன் பொதுமக்களின் உயிரிழப்புகளை எவ்வாறு குறைக்கலாம் என்பது குறித்த மேலதிக தகவல்களை கேட்டார் என அதிகாரியொருவர் தெரிவித்தார். அவர் வீட்டின் அமைப்பை பற்றி கேட்டறிந்தார், மூன்றாவது மாடியில் ஜன்னல் மற்றும் கதவுகளிற்கு பின்னால் அறைகள் அமைந்துள்ளமை குறித்து கேள்வி எழுப்பினார்.

தாக்குதலால் என்ன பாதிப்பு ஏற்படும் என்பது குறித்தும் பைடன் கேள்வி எழுப்பினார். அவர் தனது அணியின் ஒவ்வொரு அணியினரிடமும் அவர்களது கருத்தை கேட்டார்.

இறுதியில் இலக்கை குறி வைத்து துல்லியமான தாக்குதலை மேற்கொள்ளுமாறு அவர் உத்தரவிட்டார்.

இரண்டு நாட்களின் பின்னர் காபுலின் பல்கனியை இலக்கு வைத்து இரண்டு ஹெல்பயர் ஏவுகணைகள் ஏவப்பட்டன. பல புலனாய்வு தரப்புகள் அது அய்மன் அல் ஜவஹிரி என்பதை உறுதி செய்தன.

அந்த வீட்டின் ஏனைய பகுதிகளில் இருந்த ஜவஹிரியின் குடும்பத்தினருக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

மீண்டும் கொரோனா பாதிப்பினால் வெள்ளை மாளிகையில் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டிருந்த பைடனிற்கு தாக்குதல் ஆரம்பமானது முடிவிற்கு வந்தது குறித்த தகவல் தெரிவிக்கப்பட்டது.



அவசர அவசரமாக வெளியேறிய வேளை மேற்கொள்ளப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதல் காரணமாக பொதுமக்கள் கொல்லப்பட்டது போன்ற சம்பவம் மீண்டும் நிகழக்கூடிய ஆபத்து காணப்பட்டது.

ஜவஹிரி மீதான தாக்குதல் குறித்த விபரங்களை அறிவிப்பதற்கு பைடன் தயாராகிக் கொண்டிருந்தவேளை தாக்குதல் திட்டங்களை திட்டமிடல்களை சிரேஸ்ட இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த மாத இறுதியில் தாக்குதலை மேற் கொள்வதற்காக கடந்த ஒரு மாத காலமாக திட்டமிடப்பட்ட வேளை ஜவஹிரியின் குடும்பத்தவர்கள் உட்பட பொதுமக்கள் கொல்லப்படுவதை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பைடன் தொடர்ச்சியாக தனது அதிகாரிகளை கேட்டிருந்தார்.

தாக்குதலை மேற் கொள்வது குறித்த இறுதி கலந்துரையாடல்கள் மற்றும் தாக்குதலிற்கான அனுமதியை வழங்குதல் போன்ற சந்தர்ப்பங்களில் கொவிட்டினால் பாதிக்கப்பட்டிருந்த பைடன் வெற்றியை அறிவிப்பதற்காக வெள்ளை மாளிகை பல்கனிக்கு வந்தார்.

கடந்த வருடம் அமெரிக்கா தனது தகவல்களை பெறத் தொடங்கினர், ஜவஹிரி அந்த வீட்டின் பல்கனிக்கு வந்து குறிப்பிட்ட நிமிடங்கள் நிற்பது வழமை என்பது குறித்து விபரங்களையும் துல்லியமாக பெற்றனர்.

அதிகாரிகள் அவரது நடவடிக்கைகளை கண்காணித்துக் கொண்டிருந்த அதே வேளை அந்த வீட்டின் கட்டமைப்பை இரகசியமாக ஆராயும் நடவடிக்கைகளும் இடம் பெற்றன, கட்டிடங்களிற்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தாமல் உலகின் முதலாவது பயங்கரவாத இலக்கை கொலை செய்வதே இதன் நோக்கம்.

அந்த கட்டிடத்தில் வசித்த ஜவஹிரியின் குடும்பத்தினர் உட்பட பொதுமக்கள் உயிரிழப்பை தவிர்ப்பதே பைடனின் மனதிலும் அவரது குழுவினர் மனதிலும் முக்கியமான விடயமாக காணப்பட்டது.

அந்த வீட்டில் இருப்பவர்கள் குறித்த முழுமையான விபரங்களை பெறுவதில் அரசாங்கத்தின் சுயாதீன ஆய்வாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

காபுலின் புறநகர் பகுதியில் உள்ள அந்த கட்டிடம் தனக்கேரிய சவால்களை கொண்டிருந்தது. பொதுமக்கள் அதிகமாக வாழும் குடியிருப்பு பகுதியில் அந்த வீடு காணப்பட்டது.

பைடனிடம் தாக்குதலிற்கான திட்டங்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் தங்கள் தகவல்கள் 100 வீதம் உறுதியாகயிரு



# தவித்த முயல் அடிக்கும் வர்த்தகர்கள்

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -





நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மக்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் பாதிப்பை உண்டாக்கியிருக்கலாம். மக்களுக்கு வாழ்க்கைச் சுமையாக. ஆட்சியாளருக்கு அரசியல் நெருக்கடியாக, ஆட்சிச் சுமையாக. அதனால் அவர்கள் தீராத பிரச்சினைகளுக்குள்ளாகியிருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால் இதற்குள் மிகப் பெரிய நன்மைகளைப் பெற்றிருப்பது ஒரு பெரிய கூட்டம். அது வணிகத் தரப்பாகும்.

முன்னெப் போதும் பெற்றிராத லாபத்தை இந்த நெருக்கடிக் காலத்தில் வர்த்தகர்கள் பெற்றிருக்கின்றனர். ஆம், அவர்கள் மட்டுமே. இன்னும் அவர்கள் லாபத்தைப் பெற்றுக் கொண்டேயிருக்கிறார்கள். இது அவர்களுக்குக் கிடைத்த கொடை வரப்பிரசாதமாகும்.

ஏனென்றால் அவர்கள் வணிகத்தில் கேள்விக்கிடமில்லாத வகையிலான அதிகாரத்தை மிக உச்சமாகப் பெற்றிருக்கிறார்கள். எந்தப் பொருளையும் எந்த விலைக்கும் விற்கலாம். விற்காமல் பதுக்கலாம். பதுக்கிய பின் கறுப்புச் சந்தையை உருவாக்கலாம். யாரும் கேட்க முடியாது. அப்படிக் கேட்டால் அரசாங்கத்தை நோக்கியே கைகளை நீட்டுவார்கள். அப்படித் தான் செய்கிறார்கள். அனைத்தும் அரசின் தவறுகளே தவிர, தங்களுடைய தவறுகள் என்று ஒரு போதுமே சொல்லமாட்டார்கள்.

யுத்த காலத்தில், யுத்தம் நடைபெற்ற இடங்களில் கூட இந்த மாதிரி எல்லை மீறிய, கட்டற்ற, பொறுப்பற்ற, இதயமே இல்லாத சிறுமைத்தனமான வணிகம் நடைபெறவில்லை. அப்பொழுது ஓரளவுக்கு மக்களைக் குறித்தும் சமூகத்தைக் குறித்தும் சிந்திக்கும் ஒரு போக்கு, ஒரு தன்மை இருந்தது. அதை விட அன்று இவற்றைக் கண்காணிப்பதற்கான அதிகாரத் தரப்புகளும் (அரசு கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசாங்க நிர்வாகமும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகளின் நிர்வாகமும்) இருந்தன.

இப்பொழுது நிலைமை தலை கீழாகி விட்டது. அரசாங்கம் ஆட்டம் காணத் தொடங்கியதைத் தமக்குச் சாதமாகப் பயன்படுத்த முற்பட்டது வர்த்தகத் தரப்பு. அதன் இயல்பே அது தான். சந்தர்ப்பம் பார்த்துத் தவித்த முயலை அடிப்பது. யுத்தத்தின் போதும் இடையில் புலிகளுக்கும் அரசுக்கும் சுழித்துக் கொண்டு ஒரு குறிப்பிட்ட தரப்பு இப்படிச் செய்ததுண்டு. இதனால் பாவனையாளர்கள் முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பாவனையாளர் நலன் பேணுகை, பாவனையாளர் பாதுகாப்பு என்பதெல்லாமே இல்லாது போய் விட்டது. இது மிகப் பாதகமான ஒரு நிலையாகும். மக்கள் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அரசாங்கத்துக்குத்தான் இதன் அபகீர்த்தி போய்ச் சேரும்.

காரணம், தங்கள் தவறுகளையும் குற்றங்களையும் மறைப்பதற்காக அவர்கள் அரசாங்கத்தையே காண்பிக்கிறார்கள் முன்னிறுத்துகிறார்கள். இது எவ்வளவு நுட்பமான தந்திரோபயம்? எவ்வளவு கடை கெட்ட அயோக்கியத்தனம்! ஆகவே அரசாங்கத்துக்கும் இது பாதகமே. இங்கே நாம் பார்க்க வேண்டியது, செயலற்றுப்போன அரசுக்கு நிகராகவே சமூக அக்கறையும் உறை நிலைக்குப் போய் விட்டது. அரசாங்கத்துக்கு வெளியே உள்ள அரசியற் கட்சிகள், மக்கள் அமைப்புகளும் செயலற்று விட்டன. இதனால் நாட்டில் அரசாங்கத்தில் ஏற்பட்ட நெருக்கடியையும் கட்டமைப்புச் சிதைவையும் தமக்குச் சாதமாகப் பயன்படுத்தியிருக்கும் வணிகத் தரப்பைக் குறித்துக் கவனம் செலுத்துவதற்கோ தவறுகளைக் கட்டுப்படுத்துவதற்கோ யாரும் அக்கறைப்படவில்லை. ஆகவே அரசும் சரி, பொது அமைப்புகள், ஊடகங்கள், அரசியற் கட்சிகள், தலைவர்கள் உட்பட எந்தத் தரப்பும் சரி இதைப்பற்றிச் சிந்திக்கவே இல்லை. முக்கியமாக இங்கே கண்டிக்கப்பட வேண்டியவர்கள், அரசியற் தரப்பினார். அதிலும் மக்கள் பிரதிநிதிகள். ஆனால் அவர்கள் இதைக்குறித்து வாயே திறக்கவில்லை.

பதிலாக இவர்களுடைய கரிசனை முழுவதும் அரசியல் நெருக்கடியிலேயே குவிந்திருக்கிறது. ஆளை ஆள் குற்றம் சுமத்திச் சொறிந்து கொள்கிற, அந்தச் சொறிதலில் இன்பம் காணுகிற, நன்மைகளைத் தேடுகிற போக்கு இது. உண்மையில் இது நாட்டுக்கும் நன்மையைத் தாராது. மக்களுக்கும் நன்மையைத் தராது.

இதனால் பகற் கொள்ளை என்று சொல்லக் கூடிய அளவுக்கு இந்த அநீதி அப்பட்டமான கொள்ளையடிப்பு வெளிப்படையான சுரண்டல் நடக்கிறது. இதன் காரணமாகப் பல லட்சம் மக்கள் தினமும் ஒவ்வொரு நொடியும் பாதிக்கப்படுகின்றனர். இதைக் குறித்து எங்கும் முறையிடவும் முடியாது. யாரிடத்திலும் பேசவும் முடியாது. அந்தளவுக்கு நாடு இறுகிப் போயுள்ளது. அல்லது எல்லாமே சீரழிந்து விட்டன. இது பெருந் துயரம்.

அந்நியச் செலாவணியான டொலர் பிரச்சினை தட்டுப்பாடு வந்த போது பொருட்களின் இறக்குமதியில் தடங்கல் அல்லது தடை ஏற்பட்டது. இதனால் சட்டெனப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு உருவாகியது. பதுக்கல்கள் நிகழ்ந்தன. ஆகவே இயல்பாகவும் செயற்கையாகவும் உருவாக்கப்பட்ட பொருள் தட்டுப்பாட்டில் படபடவென பொருட்களின் விலை ஏறியது. அல்லது விலை ஏற்றப்பட்டது. கேள்விகள் அதிகரிக்கப்படுவதற்கு ஏற்றமாதிரி சந்தையை வணிகச் சமூகம் தன் கைகளில் முழுதாகவே எடுத்துக் கொண்டது. இது எப்படி நடந்தது?

இதற்குப் பிரதான காரணம், பதுக்கலைக் கட்டுப்படுத்தவோ கண்காணிக்கவோ அதற்குப் பொறுப்பான அரச நிர்வாகத் தரப்பு விலைக் கட்டுப்பாட்டுச் சபை உள்பட அனைத்துத் தரப்பும் தவறியதேயாகும்.

ஆரம்பத்தில் சில அதிரடி நடவடிக்கைகள் அங்குமிங்குமாக மேற்கொள்ளப்பட்டதுண்டு. ஆனால் அதையும் கடந்து அல்லது அவர்களை உச்சிக் கொண்டு தமது கைங்கரியத்தைக் காட்டத் தொடங்கினர் வியாபாரிகள். இறுதியில் வர்த்தகர்களே வெற்றியீட்டினர். இரண்டு மூன்று மாதங்களில் தங்களைக் கட்டுப்படுத்தக் கூடியவர்களோ கேட்கக் கூடியவர்களோ இல்லை என்ற அளவுக்கு வளர்ச்சியடைந்தனர். இப்பொழுது இவர்கள் மாபெரும் மா∴பியாக்களாகிவிட்டனர். இது பெரு லாபத்தை வணிகச் சமூகத்துக்கு அளித்துள்ளது.

பதுக்கலைக் கட்டுப்படுத்தவில்லை என்ற நிலையில் அதில் ருசிப்பட்டவர்கள் அடுத்தாக விலையை ஏற்றத் தொடங்கினார்கள். முதலில் நாளுக்கு நாள் ஏறிய ஏற்றப்பட்ட விலை பின்னர் காலையில் ஒரு விலை, மாலையில் ஒரு விலை என்றானது. இது மேலும் வளர்ச்சியடைந்து மணித்தியாலங்களுக்கிடையில் வேறுபடும் அளவுக்கானது. இப்பொழுது நொடிக்கொரு விலை என்றாகி விட்டது.

இதை எதிர்க்க முடியாத நிலைக்குள்ளாகினர் மக்கள். அவர்களைப் பொறுத்த வரையில் எப்படியாவது பொருட்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டம். இல்லையென்றால் தேவைக் கதிகமாக அலைந்து அதிக சிரமங்களைப் படவேண்டும். சிலவேளை குறித்த பொருளைப் பின்னர் பெற்றுக் கொள்ளவே முடியாது என்றும் ஆகி விடும்.

அதனால் எப்படியோ என்ன விலைக்கோ கிடைக்கின்ற பொருளைப் பெற்றுக் கொள்வோம் என்ற முடிவுக்குப் பலரும் வந்தனர். இதை மேலும் தமக்கான வாய்ப்பாகப் பயன்படுத்தியது வணிகத் தரப்பு.

இந்த வளர்ச்சி இன்று எல்லா இடங்களிலும் உருவாகி மனச்சாட்சிக்கே விரோதமான அளவுக்குள்ளது. மக்கள் தங்களுடைய கொள்வனவுச் சக்திக்கு அப்பால் பொருட்களைப் பெற முடியாமல் திணறுகின்றனர்.

இவ்வளவுக்கும் பெரும்பாலான பொருட்கள் ஏற்கனவே கையிருப்பில் இருந்தவை. அல்லது இங்கே களஞ்சியங்களில் இருந்தவையாகும்.

உதாரணமாக, சைக்கிள்கள், வாகன உதிரிப்பாகங்கள், துணி மற்றும் உடைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், மின் உபகரங்கள், மின்சாரப் பொருட்கள், மரப் பொருட்கள் என இந்தப் பட்டியல் நீளும்.

எரிவாயு, பெற்றோல், சீமெந்து, உரம், அரிசி, சீனி, மா, பருப்பு மற்றும் சில உணவுப்பொருட்கள் போன்றவற்றின் விலை உயர்வது தவிர்க்க முடியாதது. அவை அவ்வப்போது இறக்குமதி செய்யப்படுகின்றவை. அவற்றின் விலையை அரசாங்கமே அறிவித்தது. அல்லது அதற்குரிய நிறுவனங்கள் அறிவித்தன.

ஏனையவை அப்படியல்ல. ஆரம்பத்தில் மூன்று மாதங்களின் முன்பு சைக்கிளொன்றின் விலை 30 ஆயிரமாக இருந்தது. இப்பொழுது தொண்ணூறு ஆயிரத்தைக் கடந்துள்ளது. இது எப்படி ஏற்பட்டது? உதிரிப்பாகங்களின் விலையும் அப்படித் தான். முதல்நாள் இரவு ஒரு விலை. மறுநாள் காலை அதே கடையில், அதே பொருள் வேறு விலையில் கூடிய விலையில் விற்கப்படுகிறது. இதற்கு என்ன நியாயம் சொல்ல முடியும்?

இந்த அப்பட்டமான எல்லை மீறலுக்கு, அறம் மீறலுக்கு அளவே இல்லை. இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால் நாட்டிலே ஆட்சியாளர்களின், பெருந் தலைவர்களின் ஊழல், கொள்ளை லாபமீட்டல், சமூக விரோதச் செயற்பாடுகள் போன்றவற்றுக்கு எதிராக ஒரு பக்கத்தில் மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

மறுபக்கத்தில் அத்தகைய நடவடிக்கைகள் சத்தமின்றி அச்சமின்றி நடந்து கொண்டிருந்தது. நடந்து கொண்டிருக்கிறது. ஒரு கோத்தபாயவுக்குப் பதிலாக ஊரெல்லாம் பல கோத்தபாயக்கள் உருவாகி விட்டனர். ராஜபக்ஸக்கள் எங்கும் நிறைந்துள்ளனர் என்றுதானே அர்த்தம்!

ஆட்சியாளர்கள் மட்டும் தவறிழைக்கவில்லை. நாட்டிலுள்ள பல்வேறு தரப்பினரும் தான் தவறிழைக்கின்றனர். கொள்ளையடிக்கின்றனர். மக்களை ஏமாற்றிப் பிழைக்கின்றனர்.

இதைத் தெரிந்து கொண்டும் பல அரசியற் தலைவர்களும் எதையும் காணாத மாதிரியே இருக்கின்றனர். இறுதியில் எரிபொருளைக் கூடப் பதுக்கி கறுப்புச் சந்தையில் அதை விற்கும் நிலை ஏற்பட்டது. இதனால் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் ஏகப்பட்ட நெருக்கடிகள் உருவாகின. இதொரு பெரிய பிரச்சினையாக இன்று ஆகி விட்டது.

இதிலே வேடிக்கை என்னவென்றால் இப்பொழுது 450 ரூபாய்க்கு விற்கப்படும் எரிபொருள் விநியோகத்தைக் கண்காணிப்பதற்கு நான்கு ஐந்து அரச உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 30 ஆயிரம் ரூபாய்ச் சைக்கிள் ஒரு லட்டம் ரூபாய்க்கு விற்கப்படுவதைக் கண்காணிப்பதற்கு யாருமே இல்லை.

இது தனியே சைக்கிளுக்கு மட்டுமானதல்ல. அனைத்துப் பொருட்களுக்குமான பிரச்சினையே. மக்களின் முன்னேற்றத்துக்காகவும் அவர்களுடைய விடுதலைக்காகவும் தங்கள் உடலையும் உயிரையும் அர்ப்பணித்தது, அர்ப்பணிக்கின்றது ஒரு தரப்பு. இன்னும் தேசத்தின் (22ம் பக்கம் பார்க்க)

# ரணில் விக்கிரமசிங்கா:- மாறுகின்றாரா? மாற்றப்படுகிறாரா?

மேற்குலக சார்புடைய முதலாளித்துவ வலதுசாரிப் போக்குடையவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர், இடதுசாரிப் போக்குடைய சர்வதேச சக்திகளை நோக்கி சாயத் தொடங்கியிருப்பதான தோற்றப்பாடு உருவாகியிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர், மரபு ரீதியாக சம்பிரதாய பூர்வமாக நாடுகளின் தலைவர்களிடம் இருந்து வாழ்த்துக்களைப்பெற்றிருப்பது குறைவு. வழக்கமாக இந்தியத் தலைவர்களிடம் இருந்து முதல் வாழ்த்து, அழைப்புகள் வரும்.

எப்போதும், ருவிட்டர் பதிவுகளில் கவனமாக இருக்கின்ற தீபாவளி, தைப்பொங்கல், ஹோலி, வெசாக் என்று பண்டிகைகளை கூட மறந்து விடாமல் வாழ்த்துகளை பரிமாறுகின்ற, இந்தியப் பிரதமர் மோடி, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று ஆறாவது நாள் தான் வாழ்த்து தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதியிடம் இருந்தோ, பிரித்தானியாவிடமிருந்தோ, வேறெந்த மேற்குலக தலைவர்களிடம் இருந்தோ ஜனாதிபதி ரணிலுக்கு வாழ்த்துகள் வரவில்லை.

ஜனாதிபதியாகப் பதவியேற்று 24 மணிநேரத்துக்குள்ளாகவே, காலிமுகத் திடல் போராட்டக் களத்தின் மீது தொடுக்கப்பட்ட இராணுவத் தாக்குதல் அதற்கு ஒரு காரணமாக இருக்கக் கூடும்.

ரணில் அரசியலமைப்பு ரீதியாக தெரிவு செய்யப்பட்ட இடைக்கால ஜனாதிபதியே தவிர மக்களால் தெரிவு செய்யப் பட்ட அவர்களின் ஆணையைப் பெற்றவர் அல்ல, என்பது இன்னொரு காரணமாக இருக்கலாம்.

ராஜபக்ஷவினரின் தெரிவாக அவர்களின் பதிலியாக இந்தப் பொறுப்புக்கு வந்திருப்பது மற்றொரு காரணமாக இருக்கலாம்.

ராஜபக்ஷவினரின் குழாமுடன் இணைவதற்கு முந்தைய ரணில் விக்கிரமசிங்கவுக்கும், இப்போது அதிகாரத்தில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேர்மாறான குணவியல்புகள் உள்ளன. முன்னைய ரணில் மேற்குலகத்தின் செல்லப் பிள்ளையாக, இந்தியாவின் ஆசீர்வாதம் பெற்றவராக அறியப்படுபவர்.

கடந்த மே மாதம் ரணில் பிரதமர் ஆனதும், அவர் அமெரிக்காவின் ஆதரவுடன் தான் பதவிக்கு வந்திருக்கிறார், அதனால் விரைவில் அமெரிக்க, இந்திய மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் கிடைத்து விடும் என்று பரவலாக நம்புகின்ற நிலை காணப்பட்டது.

அந்தளவுக்கு அவர், மேற்குலக நிலைப்பாட்டைப் பிரதிபலிப்பவராக அறியப்பட்டவர். ஆனால், அவ்வாறான ஒருவரின் பக்கம் மேற்குலகமோ, இந்தியாவோ சம்பிரதாய ரீதியாக கூட இணைந்து கொள்ளவில்லை.

மாறாக, அவருக்கு சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங்கிடம் இருந்து முதலில் வாழ்த்து வந்திருக்கிறது. அதனையடுத்து, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினிடம் இருந்து வாழ்த்துக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது.

பெலாரஸ் ஜனாதிபதியிடம் இருந்தும் கூட வாழ்த்து வந்திருக்கிறது. இந்த மூன்று தலைவர்களும், அமெரிக்க, மேற்குலக நிலைப்பாட்டுக்கு எதிரானவர்கள். அவர்களுக்கு சவாலாக விளங்குபவர்கள்.

தாய்வான் விவகாரத்தில், தென்சீனக் கடல் விவகாரத்தில், பொருளாதார மற்றும் பாதுகாப்பு போட்டிகள் விவகாரத்தில், அமெரிக்கா தலைமையிலான மேற்குல, இந்திய தரப்புகளுக்கு கடும் சவாலாக விளங்குகிறது சீனா.



சீனாவின் கடன் பொறியினால் தான் இலங்கைக்கு இந்த நிலை ஏற்பட்டது என்பது, மேற்குலக, இந்திய ஊடகங்களினதும், அதிகார சக்திகளினதும் தொடர் பிரசாரமாக இருந்து வந்திருக்கிறது.

இதனை இலங்கையும், சீனாவும் தொடர்ச்சியாக மறுத்து வந்தாலும், அந்தப் பிரசாரங்கள் இந்த நிமிடம் வரை தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது.

அது போல, உக்ரேனுக்கு எதிரான படையெடுப்பை ரஷ்யா தொடங்கிய பின்னர், ரஷ்யாவுடன் ஒரு நிழல் போரை மேற்குலகம் நடத்திக் கொண்டிருக்கிறது. அதற்கு வலுச் சேர்க்கும் வகையில் ரஷ்யா மீதான பொருளாதார தடைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

1990களின் தொடக்கம் வரை, அமெரிக்கா தலைமையிலான நேட்டோ நாடுகளுக்கும் சோவியத் ரஷ்யா தலைமையிலான 'வார்சோ' நாடுகளுக்கும் இடையில் எவ்வாறு பனிப்போர் நிலை காணப்பட்டதோ அது போன்ற தான் இப்போது, அமெரிக்க ரஷ்ய உறவுகள் மாற்றமடைந்திருக்கின்றன.

கடுமையான எரிபொருள் நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை மாற்று வழிகள் பலவற்றை நாடி, அது சாத்தியப்படாத நிலையில் ரஷ்யாவிடம் உதவி கோரியது.

கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவிக் காலத்தின் இறுதி நாட்களில் ரஷ்ய ஜனாதிபதியுடன் இதுபற்றி பேசியிருந்தார். ரஷ்யாவிடம் எரிவாயு மற்றும் எரிபொருள் போன்றவற்றை கடன் அடிப்படையில் வழக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

ரஷ்யா அதற்கு எந்த உத்தரவாதமும் அளித்திருக்கவில்லை. பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள, கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் உள்ள நாடுகளுக்கு பெரியளவில் உதவிகளை வழங்க கூடிய நிலையில் ரஷ்யா இருக்காது என்று கொழும்பில் உள்ள ரஷ்ய தூதுவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தியாவிடம் விடுக்கப்பட்ட கடன் உதவிக் கோரிக்கைக்கு ரணில் அரசாங்கத்துக்கு, சரியான பதில் கிடைக்கவில்லை. முழுமையான ஆதரவு வழங்குவோம், கைவிட மாட்டோம் என்று இந்தியா தொடர்ந்து கூறினாலும், பேரளவுப் பொருளாதார உதவிகளை வழங்குவதற்கு தயங்குகிறது.

ஜப்பானிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கும் இன்னமும் சரியான பதில் கிடைக்கவில்லை. சீனாவிடம் 4 பில்லியன் டொலர்கள் உதவிக் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும், அதற்கும் பதில் கிடைக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இடைக்கால நிதி உதவிகளைப் பெறுகின்ற முயற்சிகளும், தற்போதைய அரசியல் நெருக்கடிகளால் இழுபறிக்குள்ளாகியிருக்கிறது.

மேற்குலக- இந்தியத் தரப்புகளிடம் இருந்து நிதியுதவிகளைப் பெறும் பேச்சுக்கள் முடங்கியிருக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மீட்பு திட்டத்துக்குப் பின்னரே, தங்களின் ஆதரவு பற்றி தீர்மானிக்க பெரும்பாலான நாடுகள் முடிவு செய்திருக்கின்றன.

இவ்வாறான நிலையில், சீன, ரஷ்ய தலைவர்களிடம் இருந்து மாத்திரமன்றி பெலாரஸ் ஜனாதிபதியிடம் இருந்தும் கிடைத்திருக்கின்ற வாழ்த்துச் செய்திகள், ரணில் மாற்றுப் பாதை ஒன்றை தேர்வு செய்கிறாரா என்ற கேள்வியை எழுப்புகிறது.

சீனா, ரஷ்யாவைப் போலவே பெலாரஸூம் ஜனநாயக மறுப்பு, மனித உரிமைகள் நிலைமைகளில் மோசமான பதிவுகளைக் கொண்ட நாடு.

அந்த நாட்டின் ஜனாதிபதிக்கு எதிராக இடம்பெற்ற போராட்டங்கள் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்பட்டன.

இப்போது உக்ரேனுக்கு எதிரான போருக்கு பெலாரஸை ரஷ்யா பின் தளமாகவும், ஏனைய ஆதரவுகளை வழங்குவதற்கும் பயன்படுத்திக் கொள்கிறது.

இதனால் ரஷ்யாவுடன் சேர்த்து, பெலாரஸ் மீதும் தடைகளை விதித்திருக்கிறது மேற்குலகம். ஜெனிவாவிலும் அதற்கு அழுத்தங்கள் உள்ளன.

மேற்குலகம் விரோதமாகப் பார்க்கின்ற அதன் பார்வையில் சர்வாதிகார ஆட்சி நடப்பதாக கருதுகின்ற மூன்று நாடுகளின் தலைவர்களிடம் இருந்து மட்டும் ரணில் வாழ்த்துக்களைப் பெற்றிருக்கிறார்.

அது அவரை தங்களின் வழிக்கு கொண்டு வருவதற்கு குறித்த நாடுகள் கையாளும் தந்திரமாகவும் இருக்கலாம். இலங்கையில் சீனாவுக்கு பெரியளவில் பொருளாதார நலன்களும் பாதுகாப்பு நலன்களும் உள்ளன.

வழக்கத்துக்கு மாறாக, ரஷ்ய ஜனாதிபதி புட்டினின் வாழ்த்துச் செய்தியில், பிராந்திய பாதுகாப்பு மற்றும் உறுதிப்பாடு குறித்து, வலியுறுத்தியிருப்பது, முக்கியமாக கவனத்தில் கொள்ளத் தக்கது.

அதேவேளை, இலங்கையின் ஜனாதிபதியாக பதவியேற்பவர்கள், முதலில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்வது மரபாகவே இருந்து வருகிறது.

அடுத்து, இரண்டாவது பயணம் சீனாவுக்கு மேற்கொள்ளப்படுவது தான் வழக்கம். கொரோனா போன்ற நெருக்கடிகளால், கோட்டாபய ராஜபக்ஷவினால், சீனாவுக்கு கடைசி வரை செல்லவே முடியவில்லை.

ஆனால் ரணில் விரைவில் சீனாவுக்குப் பயணம் மேற் கொள்ளவுள்ளதாக பீஜிங்கிற்கான இலங்கைத் தூதுவர் பாலித கொஹன்ன தெரிவித்திருக்கிறார்.

ரணில் இந்தியாவைத் தவிர்த்து முதல் பயணத்தை சீனாவுக்குப் மேற் கொள்வாரேயானால், அவர் மாற்று வழியில், பயணிப்பதற்கான ஒரு சமிக்ஞையைக் காட்டுவதாகவே அர்த்தப்படும்.

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -



## இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா வருடாந்த ஒன்றுகூடல் 2022

கனடா வாழ் இணுவில் மக்களின் வருடாந்த ஒன்றுகூடல்

காலம்: 07-08-2022 (ஞாயிற்றுக்கிழமை)

இடம்: மில்லீக்கன் பூ ங்கா -உ பிரிவு

(McCowan Road / Steels Ave East)

ஸ்காபுரோ

நேரம்: காலை 11.00 மணி முதல்

சகல வயதினருக்குமான களிப்பூட்டும் பல்வகை விளையாட்டுப் போட்டிகள் வழமை போல இடம் பெறும். உண்டு களித்திடவும் எமது ஊர் உறவுகளைக் கண்டு களித்திடவும் குடும்ப சகிதமாக வந்து இவ்வொன்றுகூடலைச் சிறப்பிக்குமாறு கனடா வாழ் இணுவில் மக்களை அன்போடு அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு:

சாந்தி சர்வானந்தா (416) 438-2463 (647) 200-2177

மு.கிருபாகரன் (416) 430-0422 (416) 389-7399

ப. கஜஜெயன்(416) 732-5898

# இந்தியாவுடனான ஈழத்தமிழர் உறவைப் பாதிக்கிறதா கூட்டமைப்பின் இராஜதந்திரம்?




கட்டுரையாளர்:
பேராசிரியர்
- T.K.கணேசலிங்கம் -




நடந்து முடிந்த இடைக்கால ஜனாதிபதிக்கான பாராளுமன்ற உறுப்பினர்களது தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முடிவுகள் தமிழ் மக்களது நலன்களை உள்ளடக்காததென்றென்பது தொடர்பில் அதிக விமர்சனங்கள் எழுந்துள்ளது.

அவ்வாறே தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நடவடிக்கையையும் தமிழ் மக்கள் முற்போக்கு கூட்டணியின் முடிவுகளும் தனித்து எழுந்தமானத்தில் கட்சியின் நலனையோ அல்லது தனிப்பட்ட நலனையோ முதன்மைப்படுத்துவதாக அமைந்துள்ளது என்ற விமர்சனம் காணப்படுகிறது. அத்தகைய எந்த விமர்சனத்தையும் நிராகரித்து விட முடியாது. தமிழ் மக்களின் பெரும்பான்மை பிரதிநிதிகளைக் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு இடைக்கால ஜனாதிபதி தேர்தலில் டலஸ் அழகப்பெருமவை ஆதரித்திருந்தது. அவ்வாறு ஆதரித்தமைக்கு த.தே.கூ. பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் சாணக்கியன் இருவரும் மக்கள் மத்தியில் பல காரணங்களை முன்வைத்து வருகின்றனர். இக்கட்டுரை த.தே.கூ. டலஸ் அழகப் பெருமாவை ஆதரிப்பதற்கு முன்மொழிந்த காரணம் பற்றிய உரையாடலை வாசகர் மத்தியில் முன்கொண்டு செல்ல முனைகிறது.

முதலாவது, டலஸ் அழகப்பெருமாவை ஆதரிப்பதற்கு த.தே.கூ. முடிவெடுக்கும் கூட்டத்தில் பேச்சாளர் சுமந்திரன் தொலைபேசி வாயிலாக இந்தியாவின் இலங்கைக்கான தூதரக அதிகாரியை அனுகி அவரது பதிலுக்கூடாக முக்கியமான காரணத்தை முன் வைத்துள்ளார். அதனால் த.தே.கூ. டலஸ் அழகப் பெருமாவை ஆதரிப்பதென முடிவெடுத்ததாகவே தகவல்கள் வெளியாகியிருந்தன.

அதாவது இந்தியாவே டலஸ் அழகப் பெருமவை ஆதரிக்க வேண்டும் என தொலைபேசிவாயிலாக இந்தியத் தூதரக அதிகாரி வலியுறுத்தியதாக அனைத்து த.தே.கூ. உறுப்பினர்களும் உறுதிப்படுத்தியுள்ளன. ஆனால் அதில் ஒரு பகுதியினர் பிரிந்து சென்று இரகசியமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹாவுக்கு வாக்களித்தமை வேறு விடயம்.

எதுவாயினும் த.தே.கூ. டலஸ் அழகப் பெருமாவுக்கு வாக்களிப்பதற்கு இந்தியாவின் வற்புறுத்தலே காரணம் என்பதை தெளிவாக கூட்டமைப்பும் அதன் உறுப்பினர்களும் வெளிப்படுத்தியுள்ளன. இத்தகைய முடிவு சரியானதா? அல்லது காலம் காலமாக இவ்வாறுதான நிகழ்கிறதா? அல்லது அவ்வாறு நிகழ்கிறது எனக் கூறிக் கொண்டு வேறு ஏதும் நிகழ்கிறதா? ஏன் இந்த விடயம் பகிரங்க வெளியில் அம்பலப்படுத்தப்பட்டது?. கடந்த காலங்களிலும் ஊடகங்களிலும் மக்களது முணுமுணுப்புக்குள்ளான போதும் எதுவும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. ஆனால் தற்போது தெளிவான அம்பலப்படுத்தல் நிகழ்ந்துள்ளது. அதற்கு ஏதும் உள்நோக்கம் இருகிறதா? போன்ற கேள்விகள் தவிர்க்க முடியாதவை.

இரண்டாவது, த.தே.கூ. இராஜதந்திர ரீதியில் செயல்படுவதாக அதன் பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாடி வருகின்றனர். அது மட்டுமன்றி இந்தியாவுக்கு ஆறு கட்சிகள் சேர்ந்து கடிதம் எழுதுவதும் சர்வதேச நிறுவனங்களுக்கு கடிதம் வரைவதிலும் த.தே.கூ. கட்சிகளும் ஈடுபட்டு வருகின்றன. அதனை ஒரு இராஜதந்திர செய்முறையாக வெளியே பிரச்சாரமும் செய்கின்றன. ஆனால் இந்தியாவின் இராஜதந்திர செய்முறையை அம்பலப்படுத்தி அதன் மூலம் இந்தியாவை இலங்கைத் தமிழர் விடயத்தில் முகம் சுழிக்க வைத்துள்ள விடயத்தை எப்படி இராஜதந்திரமான நகர்வாக கொள்வது என்பதே பிரதான கேள்வியாகும்.

இராஜதந்திர செய்முறையென்பது போரில் வெற்றி கொள்ளப்பட முடியாத விடயங்களை உரையாடி, சமாதானமாக நகர்ந்து, ஏமாற்றுத் தனங்களை முன்னிறுத்தி ஒரு தேசத்தின் நலனை அடைவதாக கொள்ள முடியும். இதில் தேசம் அல்லது இனம் அல்லது பிராந்தியம் என்ற வரையரையையும் உள்ளடக்க முடியும். அரசுகளுக்கிடையிலான உறவு என உத்தியோகபூ ர்வமாக அழைக்கப்பட்ட இராஜதந்திரத்தின் வடித்தின் தோற்றம் இத்தாலியக் குடாவில் மன்னர்களுக்கிடையே உறவை வளர்க்கும் விதத்தில் தூதர்களை அனுப்பும் போது அத்தாட்சிக்காக வழங்கப்படும் பத்திரம் (Diploun) என்ற இலத்தீன் மூலச்சொல்லிலிருந்து உருவானதாகும். கீழைத்தேச இராஜதந்திரம் திருவள்ளுவர், கௌடில்லியரின் சிந்தனையால் உருப் பெற்றது. அரச நன்மைக்கான தந்திரம் என்றே அழைக்கப்பட்டது. தந்திரம் என்பது வித்தை, உபாயம், உத்தி என்ற பொருள்பட பிரயோகப்படுத்தப்பட்டது. எது எவ்வாறாயினும் இராஜதந்திரத்தின் இறுதி இலக்கு அரசுக்கான நன்மை அல்லது இனத்திற்கான நன்மை அல்லது தேசத்திற்கான நன்மை என்பதே பிரதானமானதாகும்.

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் இந்தியாவுக்கும் தமிழருக்குமான பகைமை வலுப்படுத்தப்பட்டுள்ளது. இது இராஜதந்திரத்தை பிரயோகிக்கத் தெரியாது மேற் கொள்ளப்பட்டதென்பதை விட இராஜீக உறவுகளை எப்படிச் சிதைக்க முடியும் என்பதைக் காட்டியுள்ளது. த.தே.கூ. இந்தியாவினது நலனுக்காக நகர்பவர்கள் என்பதை வெளிப்படுத்தியத்தனூடாக அதன் போலித்தன்மை அம்பலமாகியுள்ளது.

இந்தியாவின் பெயரால் த.தே.கூ. செயல்படுகிறது என்பதும் தமிழ் மக்கள் மத்தியில் அதனை ஒரு அரசியல் முதலீடாக மாற்றியுள்ளது என்பதும் தெளிவாகத் தெரிகிறது. இத்தகைய ஏமாற்றுத்தனத்தை த.தே.கூ. அதிக காலம் பின்பற்றி வருகிறது. அது ஒரு போதும் இந்தியாவுடன் தமிழினத்தின் நலனுக்கான எந்த நகர்வையும் கடந்த காலங்களில் மேற்கொள்ளவில்லை. இந்தியாவை பகைத்துக் கொண்டே செயல்பட்டு வந்துள்ளது. தற்போது கூட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இரு பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரனும், சாணக்கியனும் சீனத் தூதரகத்திற்கு எந்த தரப்புக்கும் அறிவிக்காது தங்களது வருகையை நிழல்படம் செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன் சென்று திரும்பியுள்ளனர். அது மட்டுமன்றி இந்தியத் தூதரக அதிகாரியுடன் கட்சிக் கூட்டத்தில் இருந்து கொண்டு தொலைபேசி அழைப்பை முதன்மைப்படுத்தியுள்ளனர்.

இதில் பல கேள்விகள் உண்டு. அதாவது ஏன் கட்சிக்கு அறிவிக்காது சீனத் தூதரகம் சென்றமை? ஏன் நிழல்படம் எடுக்க்கூடாது என நிபந்தனை விதித்தமை? ஏன் இந்தியத் தூதரக அதிகாரியின் செய்தியை அம்பலப்படுத்தியமை?. எனவே இவை அனைத்தும் திட்டமிடப்பட்ட நகர்வாகவே தெரிகிறது. தமிழ் மக்களையும் இந்தியாவையும் முரண்பட வைப்பதன் மூலம் எதிரிக்கு சேவையாற்றும் நோக்கம் வெளிப்படுகிறது. அதற்கான ஆதாரங்களை த.தே.கூ. இன் கடந்த காலத்தில் தேடுவது பொருத்தமானது.

ஒன்று, சம்பூர் அனல்மின் நிலையம் தொடர்பானது. நல்லாட்சிக் அரசாங்கத்தின் காலத்தில் இந்தியாவின் அத்திட்டத்தை முழுமையாக தோற்கடிக்கும் நடவடிக்கையை த.தே.கூ. அரங்கேற்றியது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் கீழ் அத்தகைய எதிர்ப்பு நிகழ்ந்ததாகவும் தற்போதைய ஜனாதிபதியுடன் இணைந்து கொண்டு அத்தகைய நடவடிக்கையை தமிழ் தேசியக் கூடட்டமைப்பு மேற் கொண்டதாகவும் இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் வெளிப்படுத்தியுள்ளன. இதில் எப்படி தந்திரமாக அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ செயல்பட்டு இந்தியாவுடன் நிரந்தர முரண்பாட்டை கூட்டமைப்பினூடாக மேற்கொண்டு தமிழரை இந்தியாவின் பகையாளியாக்கியுள்ளார் என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

இரண்டு, எதிர்கட்சித் தலைவராக த.தே.கூ. தலைமை இருந்த காலம் முழுவதும் தற்போதைய ஜனாதிபதியினதும் முன்னாள் ஜனாதிபதி மைதிரிபால சிறிசேனாவும் இணைந்து தீர்வைத் தருவார்கள் என்ற அடிப்படையில் இந்தியாவுடனான உறவை பலவீனமாகவே கருதினர். ஒரு சந்தர்ப்பத்திலும் முழுமையான எண்ணத்துடன் இந்தியாவை அணுகவும் இல்லை உறவை வைத்துக் கொள்ளவும் இல்லை. இந்தியாவுக்கு இராஜதந்திர விஜயத்தை எதிர்கட்சியாக இருக்கும் போது த.தே.கூ.தலைமை மேற்கொள்ளவில்லை என்பது என்னவகை தந்திரமாக கொள்வது. 2012-2013 பின்னர் இந்தியாவுக்கு எந்தவித விஜயமும் த.தே.கூ.பாக மேற்கொள்ளவில்லை.

மூன்று, 2021 ஆம் ஆண்டு இந்தியா த.தே.கூ.ஐ புதுடில்லிக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்திருந்தது. அதற்கு பதிலளித்தவ ிதம் மட்டுமல்ல முன்வைத்த காரணம் வேடிக்கையானது என்பதுடன் அதனை எத்தகைய இராஜதந்திரத்திற்குள் உள்ளடக்குவது. கடவுச்சீட்டு காலவதியாகியமை மற்றும் தமிழரசுக் கட்சி தலைவரின் மகனின் திருமணச்சடங்கு காரணமாகவே த.தே.கூ. புதுடில்லிக்கு தமிழினத்தின் இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு செல்லவில்லை என்பது எப்படியான தந்திரமாக கொள்வது. இவை எல்லாம் தனிப் பட்ட நலனுக்கான காரணங்களே அன்றி தமிழினத்தின் நலனுக்கானதாக கொள்ள முடியுமா?. இவர்களை தமிழரின் பிரதிநிதிகளாக கொள்ள முடியுமா?

நான்கு, இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வை அமெரிக்கா முன் வைக்கப் போவதாகவும் அதற்கான உரையாடலை மேற்கொள்ளும் விதத்தில் த.தே.கூ. குழுவென்று வொசிங்டன் பயணமானது. ஆனால் அத்தகைய முயற்சி தனித்துவமானதாக அமைந்தாலும் அதன் விளைவு எதுவுமற்ற நிலையை த.தே.கூ.க்கு ஏற்படுத்தியதுடன் இந்தியாவுடனான உறவை முழுமையாக பாதிக்கும் விதத்தில் அமைந்திருந்தது.

நோர்வேயின் அனுசரணைக்குட்பட்ட பேச்சுக்களின் போதும் அதற்கு முன் பின்னான காலப்பகுதியின் போதும் இந்தியாவின் நிலை இலங்கைத்தீவு பொறுத்து கவனிக்கப்பட வேண்டியதாகும். த.தே.கூ.கடந்தகால விளைவுகளிலிருந்தோ, அல்லது நடப்பு விடயங்களிலிருந்தோ, தீர்மானங்களை மேற்கொள்ளாது தனது தனிப்பட்ட நலனுக்கும் விருப்புக்கும் தீர்மானங்களை எடுத்துவிட்டு அதற்கு வியாக்கியானம் வழங்குவதில் காலத்தை கடத்துகிறது. இத்தகைய தரப்பினாலோ கட்சியினாலோ எந்தவித பயனும் தமிழ் மக்களுக்கு ஏற்படாது என்பதை அவர்களது நடத்தை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. அவர்களிடம் தந்திரமும் கிடையாது இராஜீக நகர்வும் கிடையாது. மாறாக தனிப்பட்ட நலன் மட்டுமே காணப்படுகிறது.

எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நகர்வுகள் ஒவ்வொன்றும் ஈழத்தமிழர் - இந்திய உறவை மேலும் விரிசலாக்குவதில் கவனம் கொள்வதாகவே தெரிகிறது. இவர்களுக்கு சளைத்தவர்கல்ல ஏனைய தமிழ் தேசியப் பரப்பில் இயங்கும் கட்சிகள் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். எனவே தமிழ் மக்கள் இந்தத் தரப்புக்களை முழுமையாக கைவிட்டு விட்டு புதிய தரப்பொன்றை உருவாக்குவதே பொருத்தப்பாடுடையதாக தெரிகிறது.

காரணம் இலங்கைத்தீவு நோக்கி அதிக மாற்றங்கள் நிகழத் தொடங்கியுள்ளது. மீண்டும் இந்திய - அமெரிக்கா-சீனா போட்டிக்குள்ளே இலங்கைத்தீவு அரசியல் முழ்கப்போகிறது. தற்போது ஐசிசி உடன்பாட்டை மீள உருவாக்குவதிலும் அதன் ஊடாக இலங்கைத் தீவில் அமெரிக்காவினதும் நகர்வுகள் அதிகரிக்க சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவே தெரிகிறது. மறு பக்கத்தில் சீனாவின் ஆய்வு கப்பலான யுவாங் வெங்-5 ஹம்பாந்தோட்டையை அனுகும் போதும் ஏற்படப் போகும் விளைவுகளால் இந்தியாவின் நகர்வு எவ்வாறானது என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

# சிதைக்கப்படும் அ.தி.மு.க

கட்டுரையாளர்:- தமிழகத்தில் இருந்து
- குடந்தையான் -



உலகளவில் அதிகளவு கலாநிதி பட்டம் பெற்றிருக்கும் பெண்மணிகள் நிரம்பிய தமிழகத்தில், அதற்கு காரணமான திராவிட முறைமை பாணியிலான அரசை பலவீனப்படுத்தப்பட வேண்டும் என்றால், தி.மு.க., அ.தி.மு.க. எனும் இருமுனை அரசியல் சக்திகளைப் பிரித்து, ஏதேனுமொன்றை சிதைக்க வேண்டுமென தேசிய அளவிலான அரசியல் கட்சிகள் தீர்மானித்திருக்கின்றமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்நிலையில், தி.மு.க. ஒரு தீய சக்தி என்ற கோஷத்தின் ஊடாக பிறந்த அ.தி.மு.க.வை, அக்கட்சியில் நிலவி வரும் உட்கட்சி பூசலை ஒரு காரணமாக வைத்து, அதனை சிதைக்க வேண்டுமென தமிழகத்தில் காலூன்ற துடிக்கும் தேசிய கட்சியான பா.ஜ.க. திட்டமிட்டு பணியாற்றி வருகிறது.

அதிலும் அ.தி.மு.க.வில் தற்போது பழனிச்சாமி ஒருபுறம், பன்னீர்செல்வம் மறுபுறம், இதனை தவிர்த்து சசிகலா மற்றும் தினகரன் ஆகியோர் வெவ்வேறு திசையாக பிரிந்து, அ.தி.மு.க.வின் நான்கு முகங்களாக, தனித்து இயங்கி வருகிறார்கள். இதனால் ஒன்றரைக் கோடி தொண்டர்களின் வலிமையுடன் திகழும் அ.தி.மு.க. பிரிந்து கிடக்கிறது. இதில் யார் அ.தி.மு.க. அசல் என்பதில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

அ.தி.மு.க.உயிர்ப்புடன் இயங்க வேண்டும் என அதன் அரசியல் எதிரியான தி.மு.க. நினைத்தாலும், அதி.மு.க.வை ஆக்கிரமித்து, தன்னுடைய அரசியல் எழுச்சியை நிகழ்த்த வேண்டும் என காத்திருக்கும் பாஜக, தி.மு.க.வின் அதிகார துணையுடன் அதி.மு.க.வை தொடர்ந்து பலவீனப்படுத்தி வருகிறது. பன்னீர்செல்வத்துக்கு தொடர்ந்து ஆதரவளித்து எடப்பாடி பழனிச்சாமியை நிர்ப்பந்தித்து, பா.ஜ.க. தன்னுடைய அரசியல் கணக்கை தமிழகத்தில் தொடங்க வேண்டும் என்பதில் அக்கட்சி உறுதியாக செயலாற்றி வருகிறது.

தமிழகத்திற்கு வருகை தந்த போது எடப்பாடி பழனிச்சாமிக்கு உரிய முக்கியத்துவம் அளித்து பேசிய பிரதமர், அவர் அ.தி.மு.க.வின் இடைக்கால பொதுச்செயலாளராக தெரிவு செய்யப்பட்ட பிறகு டெல்லிக்குச் சென்று அவரை நேரில் சந்திக்க முயன்றும் தோல்வியடைந்து, பிறகு தமிழக பா.ஜ.க. தலைவரான அண்ணாமலையுடன் சந்தித்தும் உரிய முக்கியத்துவம் கிடைக்காததால் அவர் அதிருப்தியில் இருக்கிறார். இது பா.ஜ.க. திட்டமிட்டு கையாளும் உளவியல் உத்தியாகும்.

இதனிடையே அதி.மு.க.வின் உட்கட்சி விவகாரத்தில் நீதிமன்றம், தேர்தல் ஆணையம் ஆகியவற்றின் தீர்ப்புகளும் முக்கியம் என்பதால் இந்த விவகாரம் 2024ஆம் ஆண்டு நடைபெறும் பாராளுமன்றத் தேர்தல் வரை தொடரும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் தமிழகத்தில் எட்டு மக்களவைத் தொகுதிகளை குறி வைத்து போட்டியிடும் பா.ஜ.க., அங்கு வெல்வதற்கான அனைத்து உத்திகளையும் தற்போதே திட்டமிட்டு பணியாற்றி வருகிறது. இதற்கு அ.தி.மு.க.வின் அனைத்து அமைப்பு மற்றும் பேரவையின் ஆதரவு அவசியம் என்பதால், தேர்தல் நடைபெறும் வரை உட்கட்சி பூசலுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு கிடைப்பதை பா.ஜ.க. விரும்பாது என்றும் கணிக்கப்படுகின்றது இந்தியாவினபதினைந்தாவது குடியரசு தலைவராக பதவி ஏற்று கொண்ட திரௌபதி முர்முவிற்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்திருப்பது அரசியல் நாகரீகம் என்று பொதுவாக கருதினாலும், பா.ஜ.க. மற்றும் அவர்களது பிரதிநிதியான ஆளுநர் ஆகியோரின் அழுத்தங்களிலிருந்து தற்காலிகமாக நிவாரணம் பெறுவதற்காகத்தான், புதிய குடியரசு தலைவருக்கு தமிழக முதல்வர் வாழ்த்து செய்தி (22ம் பக்கம் பார்க்க)


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# இலங்கை -இந்திய ஒப்பந்தம்:- 35 வருடங்கள் எங்கிருந்து எங்கு செல்வது?

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



கடந்த பத்தியில் நமது அரசியல் சூழலிலுள்ள சில பலவீனங்கள் தொடர்பில் குறிப்பிட்டிருந்தேன். அதாவது, எதிர்பார்ப்புக்களை முன்னிறுத்துபவர்கள் எவரிடமும், அதனை அடையும் வழிமுறைகள் இல்லை. ஏனெனில் அது அவர்களுக்கு தெரியாதென்று குறித்த கட்டுரை சுட்டிக்காட்டியிருந்தது. இது தொடர்பில் சில நண்பர்கள் கேள்வியெழுப்பியிருந்தனர். அந்த பதில் உங்களிடம் இருக்கின்றதா என்று ஒரு புலம்பெயர் நண்பர் கேட்டிருந்தார். கேள்வி சரியானது. மற்றவர்களை நோக்கி தொடுக்கும் விமர்சனங்கள் என்பவை பூ மறாங் போன்றது. பூ மறாங் என்பது அதனை வீசியவரையே நோக்கி தாக்கும் திறன் கொண்டது. எறிந்தவருக்கு அதனை மீளவும் சரியாக பிடிக்கத் தெரியாது போனால், இறுதியில் எறிந்தவரையே அது தாக்கிவிடும்.

ஆனால் இவ்வாறான கேள்விகளுக்கு எனது முன்னைய பத்திகளிலும் பதிலளித்திருக்கின்றேன். மீண்டும் அந்த பதிலை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் சில விடயங்களை இந்த பத்தியில் காண்போம்.

இந்த கட்டுரை எழுதப்படும் காலத்திற்கும் தமிழர் அரசியலுக்கும் ஒரு வரலாற்று தொடர்புண்டு. 1987 யூலை (29) மாதத்தில் தான், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஆண்டுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 35 வருடங்கள் ஆகின்றன.

கடந்த 35 வருடங்களில், தமிழர் அரசியலில் பல்வேறு விடயங்கள் இடம்பெற்றிருக்கின்றன. எனினும் தமிழ் மக்களின் அரசியல் பயணத்தில் முன்நோக்கி சென்றிருப்பதற்கான சான்றுகள் இல்லை. பின்னடைவுகளே இடம் பெற்றிருக்கின்றன. பத்து லட்சத்திற்கு மேற்பட்ட ஈழத்-தமிழ் மக்கள், பல ஜரோப்பிய நாடுகளில் சிதறி வாழ்கின்றனர்.

அவர்கள் தாயக அரசியல் தொடர்பில் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதற்கு அப்பால், குறிப்பிட்டுச் சொல்ல எதுவும் இல்லை. யுத்தத்திற்கு பின்னரான, கடந்த 13 வருடங்களில் பல்வேறு விடயங்கள் விவாதிக்கப்பட்டிருந்தாலும் கூட, அவைகள் எவற்றிலும் தமிழர்கள் வெற்றி பெறவில்லை. ஆகக் குறைந்தது நம்பிக்கைக்குரிய முன்னேற்றங்கள் கூட ஏற்படவில்லை.

சர்வதேச அழுத்தங்கள் தொடர்பில் அதிகம் பேசிக் கொண்டாலும் கூட, கொழும்பின் ஆட்சியாளர்களின் அணுகுமுறைகளுக்கு ஏற்ப, அழுத்தங்கள் மாறிக் கொண்டிருந்தன. ராஜபக்சக்கள் இருக்கின்ற போது ஒரு மாதிரியும், ரணில் போன்றவர்கள் ஆட்சிக்கு வருகின்ற போது, வேறு மாதிரியுமே, மேற்குலக நாடுகள் நடந்து கொண்டன. அவர்கள் அப்படி நடந்து கொள்வதிலும் ஆச்சரியங்கள் ஏதுமில்லை. இந்த இடைப்பட்ட காலத்தில், இசையமைப்பிற்கு சொற்களை தேடுபவர்கள் போன்றே தமிழர்களின் வாழ்வு கழிந்திருக்கின்றது.

ஆனால் தமிழர் அரசியலில் தீர்மானகரமான சக்தியாக இருக்கும், பிராந்திய சக்தியான, இந்திய பேரசானது முன்னரும், இப்போதும் ஒரு விடயத்தை மட்டுமே வலியுறுத்தி வருகின்றது. அதாவது, 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான, 13வது திருத்தச்சட்டம் தொடர்பிலேயே. இந்தியா தொடர்ந்தும் அழுத்தி வந்திருக்கின்றது. இதனை ஆழமாக நோக்கினால், ஈழத் தமிழர் விடயத்தில் இந்தியாவின் கொள்கை நிலைப்பாடு, 13வது திருத்தச் சட்டம் தான். அதிலிருந்து முன்னோக்கி செல்வதென்பது வேறு விடயம். ஆனால் எந்தவொரு பயணமும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்திருக்க வேண்டும் என்பதே, புது டில்லியின் நிலைப்பாடாக இருந்திருக்கின்றது. கடந்த 35 வருடங்களில், பல சிங்கள-அரசாங்கங்கள் வந்து போயிருக்கின்றன. அவர்கள் பல்வேறு விடயங்கள் தொடர்பில் விவாதித்திருக்கின்றனர். எனினும் 13வது திருத்தச் சட்டத்தை எவராலும் தாண்டிச் செல்ல முடியவில்லை. தாண்டிச் செல்லும் முயற்சிகள் ஒன்றில் தோல்வியடைந்திருக்கின்றன அல்லது தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த 13 வருடகால அரசியல் முன்னெடுப்புக்கள் இதற்கு தெளிவான சான்றாகும்.

ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்தில், புதியதொரு அரசியல் யாப்பு தொடர்பில் ஆடம்பரமாக விவாதிக்கப்பட்டது. தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ரணில்-மைத்திரி அரசாங்கமும் தேனிலவில் இருந்தது. ஆனால் என்ன நடந்தது? புதிய அரசியல் யாப்பு விடயத்தில் வெற்றி பெற முடிந்ததா? ரணில்-மைத்திரி காலத்தில், 13வது திருத்தச் சட்டத்தை தாண்டி அதிக தூரம் சென்று விட்டதாகவே இரா.சம்பந்தன், கூறிக் கொண்டிருந்தார். ஆனால் இறுதியில் என்ன நடந்தது?

ஆனால் இங்கு பிறிதொரு விடயத்தை ஆழமாக கவனிக்க வேண்டும். இவ்வாறான முயற்சிகள் தோல்வியடைக்கின்ற போது, சிங்கள ஆட்சியாளர்கள் சிறிதும் சலனத்தை வெளிப்படுத்துவதில்லை. ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்து முயற்சிகள் தோல்விடைந்தமை தொடர்பில், ரணிலோ அல்லது மைத்திரியோ கவலைப்படவில்லை.

ஏனெனில் அவர்களை பொறுத்தவரையில் புதிய அரசியல் யாப்பு ஒரு முதன்மையான தேவையாக இருந்திருக்கவில்லை. அந்த நேரத்தில், கூட்டமைப்பின் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவரான தர்மலிங்கம் சித்தார்த்தன் ஒரு விடயத்தை என்னிடம் கூறினார். ரணில்-மைத்திரி அரசாங்கத்தில் அங்கம் வகித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவருக்குமே, புதிய அரசியல் யாப்பு விடயத்தில் அக்கறையிருக்கவில்லை. அவர்களை பொறுத்தவரையில் இது ஒரு வெட நத்தி வெட' (வேலை இல்லாதவர்களின் வேலை). ஒப்பீட்டடிப்படையில் ரணில், மங்கள சமரவீர போன்ற ஒரு சிலருக்குத் தான், இந்த விடயங்களில் ஆர்வம் இருந்தது எனலாம். இந்த பின்னணியில் தான், புதிய அரசியல் யாப்பு முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

இந்த அனுபவங்களிலிருந்து சிந்தித்தால், என்ன செய்யலாம் என்னும் கேள்விக்கான பதிலை காண்பது சிக்கலான காரியமல்ல. தமிழர்களுக்கு முன்னால் இரண்டு தெரிவுகள் தான் இருக்கின்றன. ஒன்று, இருப்பதை கையாளுவதன் மூலம் முன்நோக்கி பயணிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது.

அதாவது, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஒரு அஸ்திபாரமாகக் கொண்டு பயணிப்பது. இதில் உண்மையாகவும் உறுதியாகவும் தமிழ் தரப்புக்கள் இருக்க வேண்டும். ஒரு கட்சி 13 பற்றி பேசியவுடன், இன்னொரு கட்சி, 13 எதிர்ப்பு ஊர்வலம் செய்து கொண்டிருந்தால் இதிலும் முன்நோக்கி பயணிக்க முடியாது. இரண்டாவது, முழுமையான புரட்சிகர மாற்றத்திற்காக போராடுவது. போராட்டம் என்பது, நல்லூர் கோவிலடியில் கூடும் போராட்டம் அல்லது பொலிகண்டியில் எந்த இடத்தில் கல் வைப்பதென்று சண்டைபோடும் போராட்டம் அல்ல. ஆனால் நம் அனைவருக்கும் தெரியும். நிச்சயமாக விடுதலை போராட்டமொன்றை முன்னெடுக்கக் கூடிய நிலையில் இன்றுள்ள தலைமைகள் எவரும் இல்லை. அப்படியொரு தலைமையிருந்தால், அவரை அறிந்து கொள்வதில் இந்தக் கட்டுரையாளர் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கின்றார்.

அப்படியாயின் என்ன வழி தான் உண்டு? இப்போது, எஞ்சியிருப்பது என்ன? அது ஒன்று தான் அதவாது, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை பயன்படுத்திக் கொண்டு, மெதுவாக முன்னோக்கி நகர்வது மட்டுமே ஒரேயொரு தெரிவாக இருக்க முடியும். அப்படிப் பார்த்தால், மாகாண சபை முறைமையை திறம்பட முன்னெடுப்பதற்கான முயற்சிகளைத் தான் தமிழர் தரப்புக்கள் மேற்கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் மட்டும் தான், புதுடில்லியின் ஆதரவை ஈழத் தமிழர்கள் கோர முடியும். இதை தவிர்த்து எந்த விடயங்களை பற்றிப் பேசினாலும் அவற்றால் தாயகத்திலுள்ள மக்களுக்கு எந்தவொரு நன்மையும் ஏற்படப் போவதில்லை.

ஈழத் தமிழர்களிடம் புவிசார் பலமிருக்கின்றது, பிராந்திய பலமிருக்கின்றது என்பதெல்லாம் அரசியல் அறியாமை. நாங்கள் தேவையானதொரு மக்கள் கூட்டமென்று உலகம் கருதியிருந்தால், முள்ளிவாய்க்கால் அவலம் நிகழ்ந்திருக்காது. ஏழு கோடிக்கு மேற்பட்ட தமிழ் நாட்டு தமிழர்கள், பத்துலட்சம் ஈழத்து புலம்பெயர் சமூகம், இவர்களை சாட்சியாகக் கொண்டு தானே அனைத்தும் நடந்து முடிந்தது. அப்போது புவிசார் பலத்திற்கும், பிராந்திய பலத்திற்கும் என்ன நடந்தது? பதில் இலகுவானது. இவ்வாறான விடயங்கள் அனைத்தும் சிலரது கற்பனை. இவ்வாறான கற்பனைகள் நல்ல திரைப்படமொன்றிற்கு பயன்படலாம் ஆனால் பாதிக்கப்பட்டு, நிலைகுலைந்து போயிருக்கும் ஈழத் தமிழினத்திற்கு ஒரு போதும் பயன்படாது.


மாகாண சபை முறைமையை உச்சளவில் பயன்படுத்திக் கொண்டு, முன்நோக்கி நகர்வது தொடர்பில் சிந்திப்பது, செயற்படுவது மட்டும் தான், இப்போதுள்ள ஒரேயொரு தெரிவாகும். எதிர்காலத்தில் ஒரு சமஸ்டித் தீர்வை நோக்கி பயணிப்பதாக இருந்தாலும் கூட, அதற்கான அடிப்படையும் இங்கு தான் இருக்கின்றது. இந்த இடத்தில் பிறிதொரு சங்கடமும் குறுக்கிடலாம். அதாவது, சிலர் அன்று இதனை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லையென்று வாதிட முயற்சிக்கலாம்.

ஆனால் இங்கு கவனிக்க வேண்டியது, ஏற்றுக் கொள்ளாத விடுதலைப் புலிகள் இப்போது இல்லை. அவர்கள் ஏன் இல்லாமல் போனார்கள் என்பது ஒரு வரலாற்று படிப்பினை.


எதிர்காலத்தை சிறந்ததாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று எண்ணினால், கடந்த காலத்தை படிப்பது மிகவும் கட்டாயமானது.




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! நிதானமாக பேசுவது காரிய வெற்றிக்கு உதவும். மற்றவர்களின் காரியங்களில் ஈடுபடும் போது கவனம் தேவை. திட்டமிட்டு எதையும் செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் கூடுதல் கவனம் தேவை. வாடிக்கையாளர்களை அனுசரித்து நிதானமாக பேசுவது நன்மை தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். மேலதிகாரிகளுடன் கவனமாக பேசுவது நல்லது.





ரிஷபராசி அன்பர்களே! சில குழப்பங்கள் நேர்ந்தாலும் இது வரை நடக்காமல் இருந்த காரியத்தை சிறப்பாக செய்து முடித்து மனநிம்மதி அடைவீர்கள். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் நடந்து முடியும். முக்கிய நபர்கள் மூலம் எதிர்பார்த்த உதவியும் கிடைக்கும். பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் நடக்க தேவையான உதவிகள் கிடைக்கும்.





மிதுனராசி அன்பர்களே! சில சங்கடங்கள் நேரலாம். கெட்ட கனவுகள் உண்டாகலாம். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படும். உஷ்ண சம்பந்தமான நோய் ஏற்படலாம். எதிர்பார்த்த பணம் கைக்கு வர தாமதமாகும். இடம் பொருள் அறியாமல் பேசுவதால் அடுத்தவர்களிடம் மனஸ்தாபம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் திடீர் செலவுகள் உண்டாகும். வீண் அலைச்சல் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் தேவையற்ற பயணம் செல்ல நேரலாம்.





கடகராசி அன்பர்களே! எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்து கொள்வீர்கள். சுக்கிரன் சஞ்சாரத்தால் அலைச்சலை சந்திக்க நேரிடும். எதிர்பாலினத்தாரிடம் பழகும் போது கவனம் தேவை. விருப்பத்திற்கு மாறான சம்பவங்கள் நடக்கலாம். தொழில் வியாபாரத்தில் குறிப்பாக கூட்டு தொழிலில் இருப்பவர்கள் எச்சரிக்கையாக செயல்படுவது நல்லது.கணவன், மனைவிக்கிடையே நீடித்து வந்த மனவருத்தம் நீங்கி சந்தோஷமான சூழ்நிலை ஏற்படும்.





சிம்மராசி அன்பர்களே! அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். அடுத்தவர்களின் குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரிடலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். அடுத்தவர்கள் கூறும் ஆலோசனைகளை ஏற்கும் போது கவனம் தேவை. அவற்றை ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. புதிய பொறுப்புகள் கிடைக்கும். புதன்கிழமை அவதானம் தேவை.




கன்னிராசி அன்பர்களே! சுபச் செலவுகள் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் நன்றாக நடந்து முடியும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அடுத்தவர் பிரச்னைகளில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காமல் இருப்பது நல்லது. குடும்பத்தில் சுபகாரியங்கள், மகிழ்ச்சியான கொண்டாட்டங்கள் இருக்கும்.





துலாம்ராசி அன்பர்களேு! மனதில் குறிக்கோளை வைத்து துணிவுடன் செயலாற்றுவீர்கள். உங்கள் பேச்சு திறமையால் பல காரியங்கள் சிறப்பாக நடந்துமுடியும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகம் அவர்களால் உதவி கிடைக்கலாம். நீங்கள் செய்யும் காரியங்களுக்கு உதவுவதற்காக யாராவது ஒருவர் துணை நிற்பார். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்ய எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். போட்டிகள் விலகும். உத்தியோகஸ்தர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களை சாதிப்பீர்கள். வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதற்கான வாய்ப்புகள் வரும். வெளியூர் பயணங்கள் சாதகமான பலன் தரும். மற்றவர்களின் நலனுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். கவுரவம், அந்தஸ்து உயரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் உண்டாகலாம்.








தனுசுராசி அன்பர்களே! எதிலும் லாபமான நிலை காணப்படும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். எதிலும் தயக்கமோ பயமோ இருக்காது. தந்தையின் உடல்நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் லாபம் கூடும். ஆனால் கைக்கு பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேன்மை அடைவார்கள். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்கள் விருப்பத்திற்கு மாறாக எதையும் செய்வார்கள்




மகரராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை தைரியமாக உறுதியுடன் செயல்படுத்துவீர்கள் .உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.வீடு, மனை வாங்க திட்டமிடுவீர்கள். எடுக்கும் காரியம் சிறிது முயற்சிக்கு பின் நடைபெறும். தொழில் வியாபாரம் ஏற்ற இறக்கமாக இருந்தது இனி சீராகும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். தேவையான வசதி வாய்ப்புகள் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எந்த காரியத்தையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்து வெற்றி பெறுவீர்கள். மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் பிறக்கும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நண்பர்கள், உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். தந்தையுடன் மனஸ்தாபம் ஏற்படலாம். கணவன், மனைவிக்கிடையே ஒற்றுமை காணப்படும். நம்பிக்கையுடன் செயலாற்றி நன்மை அடைவர்.




மீனராசி அன்பர்களே! எதையும் சாதிக்கும் திறமை உண்டாகும். எடுத்த காரியத்தை செய்யும் போது எது சரி, எது தவறு என்று தடுமாற்றம் ஏற்பட்டாலும் திறமையால் அதனை செய்து முடிப்பீர்கள். பண வரவு எதிர்பார்த்தபடி இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். நிதி உதவி கிடைக்கும். வாடிக்கையாளர் மத்தியில் மதிப்பு கூடும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கலாம்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# தவித்த முயல் அடிக்கும் வர்த்தகர்கள்

(17ம் பக்கத் தொடர்ச்சி) நன்மைகளுக்காக, சமூகத்துக்காக தங்களை அர்ப்பணித்துச் செயற்படுகின்றனர் பலர். இந்த மாதிரியானவர்களின் மத்தியில் இவர்களோ இந்தக் கொள்ளையர்களோ எந்த விதமான மனச்சாட்சியும் இல்லாமல் அறா விலையில் பொருட்களை விற்கிறார்கள். கண்முன்னே கொள்ளையடிக்கிறார்கள். இதைப் பற்றி நமது சமூகத்தின் அக்கறை என்ன? பதில் என்ன? இதற்கான நடவடிக்கை என்ன? இதைக் கட்டுப்படுத்துவது எப்படி? இதற்கான தண்டனையை எப்படி, யார் வழங்குவது?

உண்மையில் ஒரு இடர் காலம் வரும்போது அதில் அனைத்துத் தரப்பும் இணைந்து நின்று ஆளுக்காள் உதவியாக, ஆறுதலாக, துணையாக இருக்க வேண்டும். அப்படித்தான் புலம்பெயர் சமூகம் இன்று பேருதவிகளைச் செய்து வருகின்றது. அது போர்க்காலமாக இருக்கலாம். போருக்குப் பிந்திய மீள் குடியேற்ற காலமாக இருக்கலாம். சுனாமி, வெள்ளப்பெருக்கு, கொரோனா போன்ற பேரிடர் காலமாக இருக்கலாம். எந்த நெருக்கடியிலும் பேராறுதலை அளித்துக் கொண்டிருக்கிறது புலம்பெயர்ந்த சமூகம்.

உள் நாட்டிலும் பலரும் பல அமைப்புகளும் தம்மால் முடிந்த உதவிகளைச் செய்து வருகின்றனர். இப்படியெல்லாம் இருக்கும் போது எந்தக் கூச்சமும் இல்லாமல் காலநேரம் பார்த்துத் தவிச்ச முயல் அடிப்போரை, அநீதி இழைப்போரை நாம் மன்னிக்கவே கூடாது. பாரதியார் சொன்னதைப்போல பாதகம் செய்வோரைக் கண்டால் நாம் பயந்து விடக்கூடாது, அவர்கள் முகத்தில் காறி உமிழவே வேண்டும்.

# சிதைக்கப்படும் அ.தி.மு.க

(20ம் பக்கத் தொடர்ச்சி) அனுப்பப்பட்டது என்ற பார்வையும் உள்ளது. இது தொடர்பாக தி.மு.க.வின் மூத்த நிர்வாகிகள், ஸ்டாலின் அவர்களது அணுகுமுறை முற்றிலும் புதிது. மாமல்லபுரத்தில் நடைபெறும் செஸ் ஒலிம்பியாட் போட்டியில் பிரதமர் பங்கே ற்பது உறுதி என்று தெரிந்த நிலையில் இந்த செஸ் விளையாட்டு போட்டியில் சிறப்பு அதிதியாக பங்கு பற்றுமாறு தமிழக அரசின் சார்பில் காங்கிரஸ் கட்சியின் தலைவரான சோனியாகாந்திக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. இது முற்றிலும் திராவிட முறைமை பாணியிலான அரசியல் என்று குறிப்பிடு கிறார்கள்.

அதேதருணத்தில் பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசு, அரிசி மீது பொருட்கள் சேவைகள் வரியை விதித்திருக்கிறது. இதற்கு அரிசி ஆலை அதிபர்கள், அரிசி மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள் என்று பலரும் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் குறித்த விலை அதிகரிப்பை வைத்து பா.ஜ.க., தி.மு.க. என்று ஆகிய அரசியல் கட்சிகளுக்கு எதிராக அரசியல் செய்ய இயலும் என்றும் அதி.மு.க.வினர் கருதுகிறார்கள்.

அ.தி.மு.க.வின் இடைக்கால பொதுச் செயலாளரான எடப்பாடி மீது கொடநாடு கொலை கொள்ளை வழக்கு விவகாரம், அ.தி.மு.க.வுக்கு ஆதரவு தெரிவிக்கும் முனன்ாள் அமைச்சர்கள் விஜயபாஸ்கர், சிவி சண்முகம், வேலுமணி ஆகியவர் கள் மீது குட்கா வழக்கு விவகாரம் இவை தொடர்ந்து உயிர்ப்பிக்கப்படும் என்பதால், தற்போதைய சூழலில் நிர்வாகிகளால் கட்டி காப்பாற்றப்படும் அ.தி.மு.க.எனும் அரசியல் சக்தியை, வழக்குகள் மூலம் பலவீனப்படுத்தும் உத்தியை மாநிலத்தில் ஆளும் தி.மு.க. அரசும், மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசும் இருமுனை தாக்குதலாக தொடு த்து வருகிறது. இந்நிலையில் பா.ஜ.க. வுடன் தொடர்ந்து பயணித்தால் சிறுபான்மையின வாக்கு வங்கி மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குகளை யும் இழக்க வேண்டி வரும். இதனை உறுதியாக புரிந்து கொண்டு, எதிர் வரும் தேர்தலில் பா.ஜ.க.வை புறக் கணித்து விட்டு, தி.மு.க. கூட்டணியில் அதிருப்தியுடன் இருக்கும் காங்கிரசுடன் கைகோர்த்து தேர்தலை சந்திக்க வேண்டுமென அ.தி.மு.க.வின் நடுநிலையாளர்கள் எடப்பாடியிடம் தெரிவித்திருக்கிறார்கள்.

பா.ஜ.க.வை கூட்டணியில் இருந்து விலக்கி விட்டால் தி.மு.க. கூட்டணியில் தற்போது அதிருப்தியுடன் இருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் அ.தி.மு.க.வில் இணைந்துக் கொள்ளும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். இத்தகைய உறுதியான நடவடிக்கையை எடப்பாடி மேற் கொண்டால் தான், தி.மு.க. மற்றும் பா.ஜ.க.வால் திட்டமிட்டு சிதைக்கப் பட்டு வரும் அ.தி.மு.க.எனும் அரசியல் இயக்கத்தை கட்டி காப்பாற்ற இயலும் எனவும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

பொதுக்குழு உறுப்பினர்கள், மூத்த மற்றும் முன்னணி நிர்வாகிகள், இரண்டாம் கட்ட தலைவர்களிடையே ஒருமித்த கருத்தின்மை போன்ற குறைபாடுகளால் தத்தளிக்கும் அ.தி.மு.க. எனும் அரசியல் இயக்கத்தை, இடைக்கால பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் எடப்பாடி தீர்க்கமான முடிவுடன் செயல்பட்டு காப்பாற்ற வேண்டும் என்பதே அ.தி.மு.க.வுக்கு வாக்களிக்கும் அக் கட்சியின் தொண்டர்கள் மட்டுமல்லாமல், திராவிட இயக்க அரசியல் காரணமாக பலன் பெற்றிருக்கும் பெண்மணிகளின் கோரிக்கையாகவும் இருக்கிறது.

எடப்பாடி எம்மாதிரியான முடிவுகளை மேற்கொள்ளவிருக்கிறார் என்பதை பொறுத்து தான் அக்கட்சியின் எதிர் காலம் இருக்கும் என்பது நிதர்சனமான உண்மை.

# இலங்கைக்கு இராஜதந்திர நெருக்கடியை....

(8ம் பக்கத் தொடர்ச்சி) அமெரிக்கா போன்ற ஒரு நாடு அவ்வாறான ஒன்றில் ஈடுபடுவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த நேரத்தில் செயற்படுவது இலங்கைக்க மிகவும் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தும். மேலும் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் பிரதான குழு நாடுகளில் அமெரிக்காவும் உள்ளதாகவும் அதன் மூலம் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் பெரும் செல்வாக்கை செலுத்த முடியும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அக தனது நரிமூளையால் பூஜ்யத்திலிருந்து ஒரு ராஜ்யத்தை அமைத்த ரணில் இந்த நெருக்கடியிலிருந்து எவ்வாறு மீளப்போகிறார்?

# சிங்கப்பூர் வந்த கோத்தாவை அரசாங்கம்

(6ம் பக்கத் தொடர்ச்சி) சிங்கப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எழுத்துமூலம் விடுத்த வேண்டு கோளிற்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாடொன்றினால் தேடப்படும் நபர் சிங்கப்பூர் ஊடாக பயணம் செய்வதற்கு அனுமதிப்பது குறித்த அந்த நாட்டின் கொள்கை குறித்து அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

சிங்கப்பூரிற்கு வந்த வெளிநாட்டவரை அவரது அரசாங்கம் தேடினால் அது குறித்து அந்த நாடு வேண்டுகோள் விடுத்தால் சட்டத்தின் அடிப்படையில் சிங்கப்பூர் உரிய நடவடிக்கையை எடுக்கும் என அந்த சிங்கப்பூரின் உள் துறை அமைச்சர் கே சண்முகம் தெரிவித்துள்ளார்.


SULLIVAN AUTO GROUP's
Tamil Fest
தமிழர் தெரு விழா
2022
POWERED BY
iConnect Mortgages
AUGUST 27TH & 28TH
தமிழர் தெரு விழா
MARKHAM RD.
(Between McNicoll Ave & Passmore Ave)
TITLE SPONSOR
SULLIVAN AUTO GROUP
BRIMELL TOYOTA
Formula Honda
MORNINGSIDE NISSAN
POWERED BY
iConnect Mortgages
Dominion Lending Centres
HOSTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
ZONE SPONSORS
COMPUTEK COLLEGE
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife Future Realty Inc.
NAVA WILSON LLP BARRISTERS AND SOLICITORS
Pradon Silks
TD
VIBRANT HOSPITALITY GROUP
WOW! WING HOUSE
COMMUNITY PARTNER
SUPPORTED BY
TORONTO
Canada
MEDIA SPONSORS
ATN ASIAN TELEVISION NETWORK
east FM 102.7
STARMETROLAND MEDIA
TAMILFEST.CA | TAMILFEST@CANADIANTAMILCONGRESS.CA | 416.240.0078 | @tamilfest

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்

வீடு வாங்க... விற்க...

**Ravi. Paramu**
*Broker*
Cell: **416-262-4176**
Bus: **416-298-3200**

HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6



**RANJANI THIRUKESWARAN LAW OFFICE**



- Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
- Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
- Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
- Family Law: குடும்ப வழக்குகள்
- Last Wills: உயில் தயாரித்தல்
- Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்

2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242



Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)

இந்த இடத்தில்
விளம்பரம் செய்ய அழையுங்கள்
416 841 9600



OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958

BUY - SELL - LEASE - INVEST

HOMELIFE HIGHER STANDARDS

ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001

TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*





RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES


$599* FLAT RATE

Aalayaa

2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500

அபாயம் உண்மையாகலாம்.

சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.



புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?

| In Canada | |
|---|---|
| Breast Cancer | 1 woman in 8 |
| Prostate Cancer | 1 man in 7 |
| Heart disease | 1 person in 4 |
| Stroke (CVA) | 1 person in 20 |

Fortunately, more people are surviving these afflictions and living longer lives.

| Survival Rate | |
|---|---|
| Cancer | 60% |
| Heart Attack | 85% |
| Stroke | 1 person in 4 |

Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.

- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years

BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%

Industry critical illness claim breakdown³




iA Financial Group

**AJITH SABARATNAM**
**647-401-5800 / 416-439-2800**
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.

